விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 08 வியாழக்கிழமை (22.06.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 185

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# தமிழீழ உரிமைப் போராட்டத்தை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும்


## தமிழ்ச்செல்வன் வலியுறுத்தல்

(கிளிநொச்சி)

தமிழீழ மக்களின் உரிமைப்போராட்டத்தை இந்திய அரசு அங்கீகரிக்கவேண்டுமென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவப்பணிய கத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் இச் சந்திப்பு நடைபெற்றது. (10 ஆம் பக்கம் பார்க்க)



## தனியார் பஸ்ஸில் பயணித்த இராணுவம் மீது தாக்குதல்

### மூவர் காயம்

(துன்னாலை)

தனியார் பஸ்ஸில் சென்ற இராணுவத்தினர் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர்.

வீதிக்கடமையை முடித்துக்கொண்டு நேற்று மாலை கலியை இராணுவமுகாமுக்குச் சென்ற இராணுவத்தினர் சேவைமுடிந்து சென்ற கொண்டிருந்த மினிவான் ஒன்றில் ஏறிச்சென்றனர்.

அவ் வேளை துன்னாலை அல்லையம்பதி முருகமூர்த்தி ஆலயத்திற்கு அண்மையில் வைத்து இனந்தெரியாதோர் இராணுவம் மீது துப்பாக்கித் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

சுமார் 5 நிமிட நேரம் துப்பாக்கித்தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது. இத் தாக்குதலில் கோப்ரல் ரஞ்சித், சிப்பாய் களான முனசிங்க,பண்டார ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-10)

## வட்டுக்கோட்டையில் தாக்குதல் இரு சிப்பாய்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டையில் நேற்றிரவு இராணுவத்தினர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

வட்டு. சித்தன்கேணி இந்துக்கல்லூரிக்கு அருகில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன்போது இரு இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து தாக்குதல் நடத்தியவர்கள் மீது இராணுவம் திருப்பித்தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவத்தில் அவ்வீதியூடான போக்கு வரத்து சில நிமிடநேரம் தடைசெய்யப்பட்டது. இதேவேளை இச் சம்பவத்தினையடுத்து இரா ணுவத்தினர் அங்கு குவிக்கப்பட்டு பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப் பட்டது.

சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த இரு வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் அங்கிருந்து மணிக்கூடு, நகைகள் என்பவற்றை எடுத்துச்சென்றுள்ளனர். இதேவேளை சம்பவம் நடைபெற்று சில நிமிடங்களில் அருகாமையில் உள்ள வீடுகளில் இருந்த மக்களை ஒழுங்கை ஒன்றிற்கு அழைத்துச் சென்று இருத்தி வைத்துள்ளனர்.

இதன்போது சிறுவன் ஒருவனைத் தாக்கியுமுள்ளனர். மோட்டார் சைக்கிள் படையணியினரால் இளைஞர்கள் சிலர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். (ச-15, 49,133)

## அரசு-புலிகளின் கடிதத்திற்கு யூன் 29 இல் நோர்டிக்கின் பதில்

(கிளிநொச்சி)

புலிகளின் கடிதத்திற்கு நோர்டிக் நாடுகளின் பதில் எதிர்வரும் 29 ஆம் திகதி வெளியாகும் என்று இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன் பின் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தார். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இரு தரப்பினருக்கும் யூன் 8-ம் திகதி நோர்வே அரசு அனுப்பிய கடிதத்திற்கு விடுதலைப்புலிகள் பதில் அனுப்பியிருந்தனர்.

அந்த கடிதத்திற்கான பதிலை நோர்வே எப்போது வழங்கும் என்று கேட்கப்பட்டபோது நோர்டிக் நாடுகளின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்த பின்னர் யூன் 29-இல் அதற்கான பதில் வெளியிடப்படும் எனத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் பதில் அனுப்பியுள்ளதை உறுதிசெய்துள்ள ஹான்ஸ் பிறட்ஸ்கர் விடுதலைப்புலிகளின் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தை அனுசரணையாளர்கள் என்ற வகையில் தாம் ஏற்றுக்கொள்ளுகின்ற போதிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையை காரணம் காட்டி அந் நாடுகளின் பிரதிநிதிகள் கண்காணிப்பில் ஈடுபடவேண்டாமென கோரியிருப்பது கவலைக்குரியதுதான் என்று குறிப்பிட்டார்.

சர்வதேச கண்காணிப்புக்குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் பணிகளை (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரப் பகுதியில் நேற்று இராணுவம் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நேற்று இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். என்றுமில்லாதவாறு சந்திகள் ,வீதிகள் தோறும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

மோட்டார் சைக்கிள் படையினரும் வீதி ரோந்தில் ஈடுபட்டனர். நேற்றுக் காலை ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் வருகையை ஒட்டியே இப்பாது காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு அவர் ஹெலி ஹெப்டர் மூலம் துரையப்பா விளையாட்டரங்கை வந்தடைந்தார். அவர் வருகையை அடுத்து போக்கு வரத்துக்கள் வழமைக்குத்திரும்பின. (ச-15,132,133)

## வயோதிபர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியில் இனந்தெரிதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச் சம்பவத்தில் அச்சுவேலி இடைக்காட்டைச் சேர்ந்த செல்லையா நடராசா (வயது 63) என்பவரே (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாட்வெஸ்ட் ஒருநாள் கிரிக்கெட் தொடர்

# ஜெயசூர்யாவின் துடிப்பான துடுப்பாட்டம் துல்லியமான பந்துவீச்சு இரண்டாவது போட்டியில் இலங்கை அணி வெற்றி

இங்கிலாந்துடனான இரண்டாவது ஒருநாள் போட்டியில் ஜெயசூர்யாவின் துடிப்பான துடுப்பாட்டம் மற்றும் துல்லியமான பந்து வீச்சினால் இலங்கை அணி 46



ஓட்டங்களால்வெற்றிபெற்றது. இதன் மூலம் 5 போட்டிகளைக் கொண்ட தொடரை 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது இலங்கை அணி. இங்கிலாந்து சுற்றுப் பயணம் சென்றுள்ள இலங்கை அணி 5 போட்டிகள் கொண்ட நாட் வெஸ்ட் ஒருநாள் தொடரில் விளையாடி வருகின்றது

இதில் இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் ஓவல் மைதானத்தில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதனடிப்படையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய சனத்ஜெயசூர்யா, உப்புல்தரங்க ஆகியோர் சிறப்பான ஆரம்பத்தை இலங்கை அணிக்கு பெற்றுக் கொடுத்தனர்.

எனினும் அணி 9 ஓவர்களில் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது முதலாவது போட்டியில் சதத்தைப் பெற்ற உப்புல் தரங்க, 17 ஓட்டங்களுடன் ஹர்மிசனின் பந்தில் தெரஸ்கோத்திக்கிடம் பிடி கொடுத்துஆட்டமிழந்தார். தொடர்ந்து இரண்டாவது விக்கெட்டுக்காக ஜெயசூர்யாவும் இணைந்து அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தனா அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி இங்கிலாந்து பந்து வீச்சாளர்களை சளிப்படையச் செய்தார்.

இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த இருவரும் 139 பந்துகளில் 160 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதுதுரஷ்டவசமாகமஹேல ஜெயவர்த்தனா 66 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆகினார். தொடர்ந்து ஜெயசூர்யாவுடன் இணைந்து குமார் சங்க காரவும் அதிரடியை ஆரம் பித்தார். மறு முனை யில் சனத் ஜெய சூர்யா ஒரு நாள் போட்டியில் தனது 20 ஆவது சதத் தைப் பூர்த்தி செய்தார்.

இலங்கை அணி 42.3 ஓவர்களில் 259 ஓட்டங்களைப் பெற்ற போது ஜெயசூர்யா 136 பந்துகளில் 122 ஓட்டங்களை (15 நான்கு ஓட்டங்களும், 2 ஆறு ஓட்டங்களும் அடங்களாக) பெற்று ஹார்மிசனின் பந்தில் பிறிஸ்னனிடம் பிடிகொடுத்துஆட்டமிழந்தார்.



தொடர்ந்து சங்ககாரவுடன் இணைந்து டில் சான் 9 ஓட்டங்களுடன் பிறிஸ்னனின் பந்தில் போல்ட் ஆகி ஆட்ட மிழந்தார்.

மறுமுனையில் குமார் சங்க கார 40 பந்துகளில் தனது அரைச் சதத்தைப் பூர்த்திசெய்தார். எனினும் அணி 47.2 ஓவர்களில் 298 ஓட்டங்களைப் பெற்ற போது சங்க கார 51 ஓட்டங்களுடன் மகமூட்டின் பந்தில் பீற்றசனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து ரசன் ஆர்னோல்டுடன் இணைந்து மகரூப் பந்துகள் எதையும் எதிர் கொள்ளாத நிலையில் ரன் அவுட் டாகினார். தொடர்ந்துரசல் ஆனொல்ட் 5, சமிந்த வாஸ் 13 ஓட்டங் களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

இறுதியில் இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெற்றுக்களை இழந்து 319 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சாங் காக ஹார் மிசன் 3 விக்கெட்டுக் களையும் மக்மூட் 2 விக்கெட்டு களையும் வீழ்த்தினர். இங்கிலாந்து அணி தனது சொந்த மண்ணில் முதலாவது போட்டியில் தோல் வியடைந்த நிலையில் இப்போட்டி யில் 50 ஓவர்களில் 320 ஓட்டங் களைப் பெற்று வெற்றியடைந்து உள்ளூர் ரசிகர்களை சமாளித்து விட வேண்டுமே எனக் களமிறங் கியது.

எனினும் இங்கிலாந்து அணியை துடுப்பாட்டத்தின் மூலம் நெருக்கடி கொடுத்த ஜெயசூர்யா பந்து வீச் சிலும் விட்டுவைக்கவில்லை. இங்கிலாந்து அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங் கிய மார்க்கஸ் தெரஸ் கோத்திக் அணித்தலைவர் ஸ்ரோஸ் ஆகி யோர் அதிரடியாக ஆரம்பித்தனர்.

எனினும் அணி 1.2 ஓவர்களில் 10 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தெரஸ்கோத்திக் 9 ஓட்டங் களுடன் மலிங்காவின் பந்தில் டில்சானிடம் பிடிகொடுத்து ஆட்ட மிழந்தார். தொடர்ந்து ஸ்ரோசுடன் இணைந்து பெல் நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார். எனினும் அணி 48 ஓட்டங்களைப் பெற்றி ருந்தபோதுமறுமுனையில்ஸ்ரோஸ் 18 ஓட்டங்களுடன் மகரூப்பின் பந் தில் முரளிதரனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்துபெலுடன் இணைந்து ஹெவின் பீற்றர்சன் தனது வழ மையான அதிரடி ஆட்டத்தை ஆரம் பித்தார். எனினும் அணி 19.4 ஓவ் களில் 116 ஓட்டங்களைப் பெற்ற போது மறு முனையில் பெல் 40 ஓட்டங்களுடன் மலிங்காவின் பந் தில் முரளிதரனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து பீற்றர் சனுடன் இணைந்துஹொலீன்வூட் டும் ஒரு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

எனினும் அணி 31.5 ஓவர்க ளில் 176 ஓட்டங்களைப்பெற்றபோது இங்கிலாந்தின் நட்சத்திர வீரர் பீற் றர்சன் 73 ஓட்டங்களுடன் ஜெயசூர் யாவின் பந்தில் நேரடியாக போல்ட் டாகி ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஹொலீவூட்டுடன் இணைந்த டெல்றிம்பில் சிறப்பாக துடுப் பெடுத் தாடினார். எனினும் இங்கிலர்து 39.5 ஓவர்களில் 222 ஓட்டங் களைப் பெற்றபோது ஜெயசூர்யா வின் சுழலில் மற்று மொரு நம் பிக்கை நட்சத்திரம் ஹொலி வூட் 56 ஓட்டங்களுடன் போல்டாகி ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஜேம்ஸ் 9 ஓட்டங் களுடன் முரளியின் பந்தில் சங்க காரவிடம் பிடிகொடுத்து ஆட்



டமிழந்தார். அணி 44 ஓவர்க ளைப் பெற்ற போது டெல்றிம்பிள் 37 ஓட்டங்களுடன் ஜெயசூர்யாவின் பந்தில் சங்ககாரவினால் ஸ்ரெம் செய்து ஆட்டமிழந்தார். பின்னர் வந்த துடுப்பாட்ட வீரர்கள் ஜொலிக் காததனால் இங்கிலாந்து அணி 46.4 ஓவர்களில் அனைத்து விக் கெட்டுகளையும் இழந்து 273 ஓட் டங்களை மாத்தரம் பெற்று 46 ஓட் டங்களால் தோல்வியடைந்தது.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக ஜெயசூர்யா 3 விக்கெட் டைக்களை, மலிங்கன் 2விக் கெற் றுக்களையும் வீழ்த்தினர். போட்டி யின் ஆட்ட நாயகனாக துடுப்பாட் டத்தில் 122 ஓட்டங்களையும் பந்து வீச்சில் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி இப்போட்டியை வெற்றிக்கு இட்டுச்சென்ற சனத்ஜெயசூர்யா வுக்குவழங்கப்பட்டது. அடுத்த போட்டி நாளை மறுதினம் நடைபெறும்.

சனத்ஜெயசூர்யாமீண்டும்தனது திறமையை வெளிப்படுத்தியிருப் பது இலங்கை ரசிகர்களை பெரும் உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது.

## இராசி பலன்

**22.06.2006**
**(ஆனி 8, வியாழக் கிழமை)**
**துவாதசி பின்னிரவு 12.27 மணிவரை**
**பரணி பிற்பகல் 4.42 மணிவரை**
**இராகுகாலம் 1.24-2.54 மணிவரை**
**சுபநேரம் 7.24-8.54 மணிவரை**
**கார்த்திகை விரதம்**

| | |
|---|---|
| மேடம் | நல்ல முயற்சி, புதிய பொருள் சேர்க்கை, சகோதரர் உதவீ, போசன சுகம். |
| இடபம் | சுபசெலவு, நல்ல முயற்சி, உறவினர் மனஸ்தாபம், பிரயாணம். |
| மிதுனம் | பொருள் வருவாய், கலந்துரையாடல், எடுத்த காரியம் கைகூடும், குடும்பசுகம். |
| கடகம் | கடின உழைப்பு, ஆரோக்கியம், காரிய நன்மை, போசனசுகம். |
| சிங்கம் | கட்டுப்பாடு, புதிய முயற்சி, பெரியோர் உதவி, இடமாற்றம். |
| கன்னி | திருடர் பயம், காரிய தடங்கல், மரியாதைக குறைவு, நிலைமாற்றம். |
| துலாம் | அபூர்வசந்திப்பு, பணவருவாய், சயன சுகம், எடுத்த காரியம் கைகூடும். |
| விருச்சிகம் | நோய்குணமடைதல், செல்வாக்கு, தடைபட்ட காரியம் கைகூடும், தனவருவாய். |
| தனுசு | மனச்சஞ்சலம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், பொருள் விரயம், புத்திரரால் கவலை. |
| மகரம் | அற்பர் உறவு, தன்னம்பிக்கைக்குறைவு, தொழில் நன்மை, இடமாற்றம். |
| கும்பம் | இனிய அனுபவம், அன்னியர் சந்திப்ப, போசன சுகம், கூட்டுமுயற்சி. |
| மீனம் | மாதர்நட்பு, காரிய தாமதம், வீண்பக்க, பொருள் விரயம். |

- வளவன்

## மோட்டார் சைக்கிள் திருத்தும் பயிற்சி நிலையம் திறப்பு

கோப்பாய் பிரதேச இளைஞர்-யுவதிகளின் நன்மை கருதி கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை அதன் தொழில் பயிற்சித்திட்டத்தை கோப்பாயில் ஆரம்பித் துள்ளமையை நாம் வரவேற்கின்றோம். இப்பயிற் சித்திட்டத்தை இப்பகுதி இளைஞர் -யுவதிகள் உரிய வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கோப்பாய் பிரதேச உதவி பிரதேச செயலர் திருமதி நிமலினி கிறிஸ்ரி ரூபன் கோப்பாயில் சர்வோதய நிறுவனம் ஆரம்பித்துள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் பயிற்சி நிலை யத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்துஉரையாற்றியபோதுதெரிவித்தார்.

சர்வவோதய நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் ஏ.கே.சிவ சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தின் போது கனேடிய உலக பல்கலைக் கழக சேவையின் திட்ட அதிகாரியான ரீ. ஏ.எஸ்.விமலன் பயிற்சி நிலையத்தின் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்தார். உதவி பிரதேச செயலர் திருமதி நிமலன் கிறிஸ்ரி ரூபன் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

இன்றைய காலகட்டத்தில் இளைஞர்-யுவதிகள் பொருத்தமான தொழிற்பயிற்சிகளைக் கற்றுக்கொள்வதன் மூலம் தமக்கான வருமானத்தை ஈட்டிக்கொள்ளக்கூடியதாகவிருக்கும் ஆதலால் இளைஞர்-யுவதிகள் இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்தி நன்மை அடைய வேண்டும். தொழில் ஒன்றைக் கற்றுக் கொண்டால் நாம் எமது சொந்தக்காலில் நிற்க முடியும்.

எனவே இளைஞர்-யுவதிகள் தன்னம்பிக்கையுடன் இந்தத் தொழில் பயிற்சியைப் பயிலவேண்டியது மிகவும் அவசியமாகும் என்றார். இத்திறப்பு விழாவில் மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் சு.பரமநாதன், இணையத்தின் செயலாளர் வீ.ஶ்ரீசக்திவேல் உட்பட வேறும் பலர் பங்குகொண்டிருந்தனர்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 25 பயிற்சியாளர்கள் இப் பயிற்சித்திட்டத்தில் இணைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (து-16)

## ஓமந்தை காவல் நிலையத்தில் விபரங்கள் பதிவு

ஓமந்தை ஊடாக வடபகுதிக்கு செல்லும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் ஓமந்தை காவல் நிலையத்தில் தமது உயிருக்குத் தாமே பொறுப்பு என்று உறுதியுரை ஒன்றைவழங்க வேண்டுமென்று பொலிஸார் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடபகுதிக்கு செல்லும் சாதாரண மக்களிடம் அவர்கள் செல்லும் இடம் அவர்கள் திரும்பி வரும் நாள் என்பன குறித்த தகவல்களை தாம் பெறுவதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர். ஓமந்தையூடாக தொழில்நிமித்தம் பெரும்பான்மையின மக்கள் பலர் வன்னிக்குச் செல்வதாகவும் அவர்களின் பாதுகாப்பு கருதியே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆனால் ஊடக வியலாளர்களுக்கு அவ்வாறானநடைமுறைகள் எதுவும் கடைப்பிடிக்கப் படுவதில்லைஎன்றுஓமந்தைப்பொலிஸார் தெரிவித்துள்ளனர். (து-9)


## அருள் மிகு சுன்னாகம் மயிலணி கந்த சுவாமி கோவில் மஹோற்சவம்



2 ஆம் நாள் 22.06.2006
(கார்த்திகைத் திருவிழா)



## பயமின்றி வாழ வழியுண்டு

பயமின்றி வாழ வழியுண்டு சுன்னைப்
பழம்பதி வாழ்
கயலுண்கண் வள்ளி கணவன்
குமரன்றன் கான்மலரை
மயலின்றி வாழ்த்தி மல மூன்றும் போக்கி மகிதலத்திற்
செயலற்று யாவும் அவனங்கே யென்று
தெளிந்திடினே!

கு.முத்துக்குமார சாமிப்பிள்ளை

# பயங்கரவாதத்துக்கு தூபம் போடும் அமெரிக்கா ஜனநாயக மாண்புபற்றி பேசும் ஆச்சரியம்!

அமெரிக்காவில்கடந்த6ஆண்டு காலமாகப் பதவியில் இருக்கும் ஆட்சித் தலைவர் புஷ் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் மீது மேற்கொண்ட பயங்கரவாதத்துக்கு எதிரான போர் காரணமாக அமெரிக்க நாட்டின் படிமத்தை உலகளாவிய அளவில் வெகுவாகப் பாதிப்படையச் செய்துள்ளார்.



உலகளாவிய மட்டத்தில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்று ஈரான் அணுக்குண்டு தயாரிக்க எடுத்துவரும் முயற்சியை விட அமெரிக்கா ஈராக் மீது படையெடுத்து அதனை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது உலக அமைதிக்கு அதிக ஆபத்தாக அமைந்துள்ளது எனக் கூறுகிறது.

ஆண்டுதோறும் நடத்தப்படும் இந்தக் கருத்துக் கணிப்பு 1999 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்காவிற்கான உலகளாவிய ஆதரவு தேய்ந்து கொண்டு வருவதைக் காட்டுகிறது. 20ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவின் படிமம் ஒப்பீட்டளவில் பெரும்பாலும் சார்பானதாகவே இருந்துள்ளது. அமெரிக்கா மக்களாட்சியோடும், மனித வுரிமைகளோடும் தொடர்புபடுத்திப் பார்க்கப்படும் நாடாகும். விதிவிலக்காக வியட்நாமிய போர்க் காலத்தில் மட்டும் அமெரிக்கா உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரும் கண்டனத்துக்கு உள்ளானது.

அமெரிக்காவின் தோழமை நாடான பிரித்தானியாவில் கூட அமெரிக்காவிற்கான ஆதரவு 1999ஆம் ஆண்டில் 83விழுக்காடாக இருந்தது. இப்போது 56 விழுக்காடாக வீழ்ச்சி கண்டுள்ளது. இதே பாணியில் பிரான்சில் 62இல் இருந்து 39 விழுக்காடாகவும், ஜெர்மனியில் 78 இல் இருந்து 37விழுக்காடாகவும், இசுப்பானியாவில் 50 இல் இருந்து 23விழுக்காடாகவும் அமெரிக்காவிற்கான ஆதரவு சரிந்துள்ளது.

முஸ்லிம் நாடுகளைப் பற்றி சொல்லவே வேண்டியதில்லை. இஸ்லாமிய நாடான இந்தோனேசியாவில் அமெரிக்க ஆதரவு 75இல் இருந்து 30 விழுக்காடாகக் குறைந்துள்ளது. துருக்கியில் 52 இல் இருந்து 12 விழுக்காடாக வீழ்ந்துள்ளது.

அமெரிக்காவின் படிமம் சரிந்ததற்கு ஈராக்தான் காரணம் என்கிறார் Pewcentre இணை இயக்குநர் டொஹேட்டி கரோல் ஈரான் சிக்கலில் அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையில் மனவொற்றுமை காணப்பட்டாலும் ஐரோப்பிய மக்களிடம் அமெரிக்கா பற்றியபடிமத்தில்முன்னேற்றம் காணப்படவில்லை.

கடந்த ஆண்டு யூன் மாதம்11 ஆம் திகதியில் அமெரிக்க குவந்தனாமோ படைத்தளத்தில் இருந்த அதியுச்ச பாதுகாப்புச் சிறைச்சாலையில் நீதி விசாரணை எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று கைதிகள் தூக்குப் போட்டுத்தற்கொலைசெய்துகொண்டார்கள். தற்கொலை செய்ய உடுத்தியிருந்த துணிகளையும் படுக்கை விரிப்புக்களையும் தற்கொலையாளிகள்பயன்படுத்தியுள்ளார்கள். இவர்களில் இருவர் சவுதி அரேபியா நாட்டுக் குடிமக்கள். எஞ்சியவர் ஜேர்மனி நாட்டைச் சேர்ந்தவர்.

குவந்தனாமோ சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் இதற்கு முன்னரும் பலமுறை தற்கொலைக்கு முயற்சிகள் செய்திருந்தாலும் இதுவே வெற்றிகரமாக நடந்துள்ள முதலாவது தற்கொலை ஆகும். குவந்தனாமோ சிறைச்சாலையில் சுமார் 460 கைதிகள் சிறை வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் எல்லோரும் சென்ற நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினரால் சிறைப் பிடிக்கப்பட்டவர்கள்.

மனிதவுரிமை அமைப் புக்கள் இந்தத் தற்கொலையாளிகள் மனமுறிவு (Despair) காரணமாகவே தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டார்கள் என்றும் போர் பற்றிய விதிகளை அமெரிக்கா காலில் போட்டு மிதிப்பதே இத் தற்கொலைக்குக் காரணம் என்று குற்றம் சாட்டியுள்ளன. மேலும் சிறைச்சாலையில் நீதி விசாரணையின்றி நீண்ட காலம் தடுத்து வைத்து விசாரணை என்ற போர்வையில் கைதிகள் கடுமையாகச் சித்திரவதை செய்யப்படுவதே இந்தத் தற்கொலைகளுக்குக் காரணம் என்றும் சிறைச்சாலையில் இழைக்கப்படும் கொடுமைகள் மேலும் பலரைத் தற்கொலைக்குத் தூண்டக்கூடும் எனக் கருத்து வெளியிட்டுள்ளன.

அதேசமயம் அமெரிக்க படைத்தளபதி ஒருவர் இந்தத் தற்கொலைகள் முன்கூட்டியே திட்டமிட்டு அமெரிக்காவிற்கு எதிராகப் பொதுமக்களது எண்ணங்களைத் திருப்பி விடச் செய்யப்பட்ட ஒரு 'போர் நடவடிக்கை' என வருணித்துள்ளார்.

*கடுமையான சித்திரவதைகள்*

உளவியல் அடிப்படையில் கைதிகளைப் பதம் பார்க்க அமெரிக்க படையினர் கடுமையான விசாரணை உத்திகளைக் கையாண்டு சித்திரவதைகளை மேற்கொள்கின்றனர். காலவரையற்ற சிறை, நீண்டகாலத்துக்குத் தனிமையில் அடைத்து வைத்தல், தாங்கமுடியாத குளிர் அல்லது கடுமையான வெப்ப அறைகளில் அடைத்துவைத்தல், தண்ணீரில் அமுக்கி கொலை செய்யப்போவதாகப் பாவனை செய்தல், அடித்தல், தலைகீழாகத் தொங்க விடுதல், கால்களில் விலங்குகளை மாட்டுதல், நித்திரைசெய்யவிடாது தடுத்தல், உணவு மற்றும் தண்ணீர் கொடுக்காது பட்டினி போடல், நாய்களை ஏவிவிட்டுப் பயமுறுத்தல், சிறுநீர் கழித்தல், பிறந்த மேனியாக்குதல் பாலியல் துன்புறுத்தல் ஆகியவை இந்தச் சித்திரவதைக்குள் அடங்கும்.

இந்தத் தற்கொலைகள் முற்றிலும் எதிர்பார்க்கப்பட்டவையே ஆகும். இந்தத்தற்கொலைகளுக்கு அமெரிக்கா முற்று முழுதான பொறுப்பை ஏற்க வேண்டும் என யாப்புரிமைகளுக்கானமையத்தின் (Center for constitution al Rights) சட்டத்தரணிகளில் ஒருவரான கீதாஞ்சலி குத்திரேஸ் (Gitanjali Gutierrez) காட்டமாகக் கூறியுள்ளார். இந்த மையம் 460 தடுப்புக் கைதிகளில் 170 தடுப்புக் கைதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

*ஐக்கிய நாடுகள் குழு*

இது இவ்வாறிருக்க இந்தக் கிழமை சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள்குழுகுவந்தனாமோ படைத்தளத்தை மூடுமாறு அமெரிக்காவைக் கேட்டுள்ளது. மேலும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இரகசிய சிறைச்சாலைகளில் கைதிகளை அடைத்து வைக்கும் வழமையைக் கைவிடுமாறும் சித்திரவதையைக் கையாளும் நாடுகளில் செயல்படும் இரகசிய சிறைச்சாலைகள் அனைத்தையும் மூடிவிடுமாறும் அந்தக் குழு கேட்டுள்ளது. பத்து நிபுணர்கள் கொண்ட இந்த ஐக்கிய நாடுகள் குழு சித்திரவதைக்கு எதிரான ஒப்பந்தத்தை உறுப்பினர் நாடுகள் நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்கிறது. இந்த உடன்படிக்கையை 141 நாடுகள் இது வரை உறுதிசெய்துள்ளன.

ஐக்கியநாடுகள்குழுவின் அறிக்கையை எல்லா மனிதவுரிமை அமைப்புக்களும் மிகவும் பாராட்டி வரவேற்றுள்ளன. புகழ்பெற்ற மனிதவுரிமை அமைப்பான பன்னாட்டு மன்னிப்புச்சபை குவந்தனாமோ சிறையில் மூன்று தடுப்புக் கைதிகள் தற்கொலை செய்ததையிட்டு அமெரிக்காவைப் பலமாகச் சாடியுள்ளது. 'குவந்தனாமோ சிறைச்சாலையில் இடம்பெறுகின்ற சட்டச் சீர்குலைவை சரிப்படுத்த அமெரிக்கா நடவடிக்கை எடுக்க வேண்டும்' எனக் கேட்டுள்ளது.

அமெரிக்க பொதுமக்கள் விடுதலை யுரிமைக்கான அமைப்பும் (The American Civil Liberties Union) அமெரிக்கா உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சித்திரவதைக்கு எதிரான நடவடிக்கையினை எடுப்பதில் தவறி விட்டதாக குற்றம் சாட்டியுள்ளது. அமெரிக்காவின் படிமம் வெறுமனே அபு கிறாய்ப் ஒளிப்படங்களினால் மட்டும் கறைப்படுத்தப்படவில்லை. சித்திரவதைக் குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராகக் காத்திரமான நடவடிக்கை எடுக்கத் தவறியதாலும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது என ஏசிஎல்யூ நிறைவேற்று இயக்குநர் அந்தோனி டி றோமிறோ (Anthony D.Romero) குற்றம் சாட் டியுள்ளார்.

அமெரிக்கா இரகசியமான சிறைச்சாலைகளை வைத்திருப்பதாகவும் அப்படியான சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை செஞ்சிலுவைச் சங்கம் சந்தித்துப்பேச அனுமதிக்கப்படவில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளது. விசாரணையின் போது கையாளப்பட்ட உத்திகளால் தடுத்து வைக்கப்பட்ட கைதிகளில் சிலர் இறந்து போனார்கள் என ஐக்கிய நாடுகள் குழு தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மட்டுமல்ல சுவீடன், சவுதி அரேபியா போன்ற நாடுகளும் ஐக்கிய நாடுகள் குழு கண்டனத்துக்குள்ளாகி இருக்கின்றன. 'நீண்டகாலமாக அமெரிக்கா மனித வுரிமைச் சட்டங்கள் அமெரிக்கப் படைகளின் போர் நடவடிக்கைகளுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது என வாதிட்டு வந்துள்ளது.

*ஐரோப்பிய ஒன்றியம் மீது அமெரிக்கா அழுத்தம்*

மனிதவுரிமை பற்றி மிகவும் அலட்டிக்கொள்ளும் இன்னொரு அமைப்பு ஐரோப்பிய ஒன்றியம் ஆகும். ஆனால் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் போர்க்கைதிகளை சிறைவைக்க அமெரிக்கா இரகசியமாக மேற்கொண்ட ஆயிரத்துக்கும் அதிகமான விமானப் பறப்புக்களுக்கு இரகசியமாகப் பச்சைக்கொடி காட்டியுள்ளன. இரகசிய சிறைச்சாலைகளை தங்கள் மண்ணில் அமெரிக்கா அமைப்பதற்கும் ஐரோப்பிய நாடுகள் பல அனுமதி வழங்கியுள்ளன. அமெரிக்கா ஐரோப்பிய நாடுகள் மீது செலுத்திய அழுத்தம் காரணமாகவே இந்த மனிதரிமை மீறலுக்கு அந்த நாடுகள் பணிந்து போயுள்ளன!

பன்னாட்டு மன்னிப்புச்சபை கியூபாவில் உள்ள குவந்தனாமோ சிறைச்சாலையை மூடிவிட்டு பயங்கரவாதத்தின் மீதான போர் காரணமாக கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட தடுப்புக் கைதிகள் பற்றிய முழுத்தரவுகளையும் அமெரிக்கா வெளியிட வேண்டும் என மேலும் கேட்டுக் கொண்டுள்ளது.

அமெரிக்காவின் எடுபிடி நாடெனக் கணிக்கப்படும் பிரித்தானியாவின் யாப்பு நடவடிக்கைகள் அமைச்சர் Harriet Harman எல்லாமே சட்டப்படி நடைபெறுகிறது என அமெரிக்கா சொல்வது உண்மையானால், ஏன் இந்தத் தடுப்புக் கைதிகளை அமெரிக்க நாட்டுச் சிறைச்சாலைகளில் தடுத்து வைத்து விசாரணை செய்யக் கூடாது? அப்படிச் செய்தால் அமெரிக்க நீதிமன்றங்கள் இந்தத் தடுப்புக் கைதிகளைக் கண்காணிக்க முடியுமே? என பிபிசி தொலைக்காட்சிக்குக் கொடுத்த நேர்காணலில் கேள்வி எழுப்பியுள்ளார்.

குவந்தனாமோபடைத்தளத்தை தடுப்புக் கைதிகளை அடைப்பதற்குப் பயன்படுத்தக் கூடாதென்றும் அதனைத் திருப்பி தன்னிடம் ஒப்படைக்குமாறும் கியூபா அமெரிக்காவைக் கேட்டுள்ளது. அமெரிக்கா 1902ஆம் ஆண்டு தொடக்கம் குவந்தனாமோ வளைகுடாவை சட்டத்துக்கு முரணாகப் பிடித்து வைத்துள்ளது.

1959ஆம் ஆண்டு நடந்த புரட்சிக்குப் பின்னர் அதனைத்திருப்பி ஒப்படைக்குமாறு கியூபா கேட்டுவந்தாலும் அமெரிக்கா அதனைக் காதில் போடாது தொடர்ந்து தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

*பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் பாதிப்பு ஏற்படக்கூடாது*

குவந்தனாமோ முகாமை மூடுமாறு கேட்கும் நாடுகளோடு ஐரோப்பிய ஒன்றியமும் சேர்ந்துள்ளது. பயங்கரவாதம் எமது சமுதாயத்துக்கு எதிரான ஒரு அச்சுறுத்தல் என்பது உண்மையே. ஆனால் பயங்கரவாதத்துக்கு எதிரான போர், எமது மக்களாட்சி, நீதிநெறிகள் மற்றும் நீதி அமைப்புக்களைப் பாதிக்கிற மாதிரி இருக்கக் கூடாது என டனிஷ் நாட்டின் வெளியுறவு அமைச்சர் Berlingske Tidende தெரிவித்துள்ளார்.

இவ்வாறு எட்டுத் திசையில் இருந்தும் புறப்பட்ட கண்டனக் கணைகளால் புண்பட்டுப் போயிருக்கும் புஷ் குவந்தனாமோ சிறைச்சாலையை மூடுவது பற்றி யோசிக்கப்படும் எனத் திருவாய் மலர்ந்துள்ளார்.

செப்ரெம்பர் 9 இல் இஸ்லாமிய தீவிரவாதிகள் நியூயோர்க் நகரில் உள்ள வாணிக கோபுரத்தைத் தாக்கி 3,000 க்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றார்கள். அது கண்டிக்கப்பட வேண்டிய பயங்கரவாதச் செயலாகும்.

ஆனால் அதற்குப் பதிலடியாக அமெரிக்கா தன்னிச்சையாக ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்புப் போர் முற்றிலும் அநீதியானதாகும். பன்னாட்டுச் சட்ட திட்டங்களுக்கு எதிரானதாகும். மூவாயிரம் அமெரிக்க பொதுமக்கள் தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டதற்கு முப்பதினாயிரம் ஈராக்கிய பொதுமக்களைக்குண்டுவீசிக்கொல்வது அரச பயங்கரவாதமாகும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் மனிதவுரிமைகள் பலியாகக் கூடாது. அமெரிக்கா இன்று கேட்டுக்கேள்வியின்றி மனிதவுரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கிறது. அப்படிச் செய்வதால் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்குப் பதில் அமெரிக்கா அதற்கு நெய்யூற்றி வளர்க்கிறது. மக்களாட்சியின் மகிமை பற்றியும் மனிதவுரிமைகள் பற்றியும் வன்முறை பற்றியும் ஊருக்கு உபதேசம் செய்யும் புஷ் அவர்களுக்கு தன்னையும் அமெரிக்காவையும் மற்றவர்கள் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள் ஆற்றலை கடவுள் தான் கொடுக்க வேண்டும்!

## மங்கள சமரவீர இன்று இந்தியா பயணமாகிறார்

இலங்கையின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர இன்று இந்தியாவிற்கு செல்லவுள்ளார். இதன் போது இந்திய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனை அவர் சந்திக்கவுள்ளார். இலங்கையின் பாதுகாப்பு நிலவரம் குறித்து இந்தச் சந்திப்பின் போது அமைச்சர் மங்கள சமரவீர விளக்கமளிக்கவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்நாட்டின் முதலமைச்சரையும் அமைச்சர் மங்கள சமரவீர சந்திக்கவுள்ளார். ஏற்கனவே இந்திய மத்திய அரசாங்கம் இலங்கைப் பிரச்சினையில் தலையிட வேண்டுமென்று தமிழக அரசாங்மும், எதிர்க்கட்சியும் கோரிக்கை விடுத்துள்ளன.

இதனையடுத்து இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தமது பிரதிநிதியாக பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனை தமிழகத்திற்கு அனுப்பி வைக்க முடிவெடுத்துள்ளதாக தமிழக முதலமைச்சர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை செய்யப்பட்ட பின்னர் முதன்முறையாக இலங்கை விடயத்தில் இந்தியா காட்டும் அதிக முனைப்பு இதுவென ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (த-9)

## நிர்வாகிகள் தெரிவு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 2006/2007ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றுள்ளது. இதன் பிரகாரம் கழகத்தின் புதிய தலைவராக லயன் வடிவேலு ஸ்ரீ பிரகாசும், செயலாளராக லயன் சுபரத்தினம்நரேந்திரனும், பொருளாளராக லயன் துரைரத்தினம் ஸ்ரீ சுதரனும் தெரிவாகியுள்ளனர்.

லயன் கழகத்தின் புதிய நிர்வாகிகளுக்கான பதவியேற்பு வைப வம் ஜூலை முதலாம் திகதி சாவகச்சேரியில் நடைபெறவுள்ளதாக தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்துள்ளார். (த-16)

## இன்று ஒரு தகவல்

# முட்டாள் மனிதர்கள்

ஒரு பெரிய நினைவு மண்டபத்திற்கு முன்னால் ஒரு அப்பாவும் பிள்ளையும் நின்று கொண்டிருந்தார்கள். அந்த வழியாகப் போவோர் வருவோரெல்லாம் அந்த இடத்தில் நின்று அது என்ன மண்டபம்? என்று விசாரிக்க ஆரம்பித்தார்கள். அந்த அப்பாவும் பிள்ளையும்தான் வருபவர்களுக்கெல்லாம் விபரம் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

அதாவது... இந்த இடத்தில் ஒரு பெரிய மகான் சமாதி ஆகியிருக்கிறார். அவர் சமாதி ஆன இடத்தில் இந்த நினைவு மண்டபத்தைக் கட்டியிருக்கிறோம் என்றார்கள். இந்தச் செய்தி ஊர் முழுவதும் பரவியது. நிறையப் பேர் அந்த இடத்தைத் தேடிவர ஆரம்பித்தார்கள். இங்கே வந்து கொஞ்சநேரம் உட்கார்ந்துவிட்டுப் போனால் மனதிற்கு ஒரு நிம்மதி கிடைகிறது என்றார்கள். அங்கேயிருந்த உண்டியலில் நிறையக் காசு போட்டுவிட்டுப் போனார்கள்.

பணம் நிறையச் சேர்ந்தவுடன் அந்த அப்பாவுக்கும் பிள்ளைக்கும் தகராறு வந்துவிட்டது. பணம் சேர்ந்தாலே சொத்து தகராறு வரத்தானே செய்யும். மகன் அடிக்கடி நிறைய பணம் கேட்டான். அப்பா யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார். ஒருநாள் மகனைக் கூப்பிட்டார். "இதோ பாரப்பா நமக்குள் தகராறு வேண்டாம். அப்பாவும் பிள்ளையும் இப்படி சண்டை போட்டுக்கொண்டால் பார்ப்பவர்கள் தவறாக நினைப்பார்கள். அதனால் நமக்குள் சமரசமாக இதைத் தீர்த்துக் கொள்வோம் என்ன சொல்கிறாய்?" என்றார் அப்பா. 'சரி' என்றான் மகன்.

உடனே அப்பா மகனிடம் கொஞ்சம் பணம் கொடுத்தார். தன்னிடமிருந்த ஒரு கழுதையையும் கொடுத்தார். "இதை வைத்து நீ பிழைத்துக்கொள்" என்று சொல்லி அனுப்பி விட்டார். மகன் அந்தக் கழுதையை இழுத்துக்கொண்டு அடுத்த ஊருக்குப் போனான். வழியிலேயே அந்தக் கழுதை இறந்துவிட்டது. என்ன செய்யலாம் என்று யோசித்து ஒரு முடிவுக்குவந்தான். அந்தக் கழுதையை சாலையோரமாக புதைத்தான். கையிலிருந்த காசைக் கொண்டு அந்த இடத்தில் ஒரு கல்மண்டபம் கட்டினான்.

அந்த வழியாக இரண்டு பேர் வந்தார்கள். "இது என்ன மண்டபம்" என்று விசாரித்தார்கள். "இந்த இடத்தில் ஒரு பெரிய மகான் சமாதி ஆகியிருக்கிறார்" என்றான். இந்தச் செய்தி ஊர் முழுவதும் பரவியது.நிறையப்பேர் வந்து போக ஆரம்பித்தார்கள் . இங்கே வந்தால் மனதிற்கு நிம்மதி கிடைக்கிறது என்றார்கள். வரவர கூட்டம் அதிகமாக வர ஆரம்பித்தது. உண்டியலில் பணம் நிறை சேர்ந்து விட்டது. நகைகளைக் கூட காணிக்கையாக்கிப் போட ஆரம்பித்தார்கள். அப்பாவை விட மகன் பெரிய ஆளாகிவிட்டான்.

இதைக் கேள்விப்பட்டார் அப்பா. மகனைப் பார்த்து விட்டு வரலாமென்று ஒருநாள் புறப்பட்டு வந்தார். மகன் ஓகோ என்று இருந்தான். பங்களா, கார் எல்லாம் வந்துவிட்டது. "எப்படி இந்த அளவுக்குப் பெரிய ஆள் ஆனாய்?" என்று கேட்டார். "அப்பா எல்லாம் உங்கள் ஆசீர்வாதம் தான் .அப்பா நீங்கள் கொடுத்த மூலதனத்தை வைத்துத்தான் இவ்வளவும் சம்பாதித்தேன்"என்றான் மகன். "அது எப்படி?" என்று கேட்டார்.

"அப்பா நீங்கள் ஒரு கழுதைக் குட்டியும் கொஞ்சம் பணமும் என்னிடம் கொடுத்தனுப்பினீர்கள். அதை எடுத்துக் கொண்டு வந்தேன். வரும் வழியில் அந்தக் கழுதை இறந்து விட்டது. உடனே யோசித்தேன். அந்தக் கழுதையை இந்த இடத்தில் புதைத்தேன். மண்டபம் கட்டினேன். மகான் ஒருவர் சமாதியாகியிருக்கிறார் என்று வதந்தியைக் கிளப்பி விட்டேன். மக்கள் ஏமாந்துபோய் காசைக் கொண்டுவந்து கொட்டுகிறார்கள். நான் பிழைத்துக்கொண்டிருக்கிறேன்" என்றான் . "இப்போதுதான் நீ என் மகன்" என்று சொல்லி சந்தோஷப்பட்டார் அப்பா.

"ஏன் அப்பிடிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டான் மகன். "கழுதைக் குட்டியைப் புதைத்து மண்டபம் கட்டியிருக்கிறாய் நீ! ஏற்கனவே நமது ஊரில் நாம் கட்டியிருக்கிறோமே... அதுதான் இந்தக் கழுதையின் அம்மாவைப் புதைத்த இடம். மகான் சமாதி ஆகியிருக்கிறார் என்று நானும் சும்மா கப்ஸாதான் விட்டேன்" என்றார் அப்பா. முட்டாள் மனிதர்களை நினைத்து அந்த இருவரும் சத்தம் போட்டு சிரித்தார்களாம். ரஷ்யாவில் நடந்த ஒரு நாடகத்தின் கதை இது.

மனிதனை மனிதன் ஏமாற்றுவது மிகவும் சுலபம். என்னுடன் படித்த ஒருவன் திடீரென்று ஒருநாள் எல்லோருக்கும் அருள்வாக்குச் சொல்ல ஆரம்பித்துவிட்டான். அவன் ஒரு அலுவலகத்திலும் வேலை செய்கிறான். அங்கு உள்ளவர்கள் அவனிடம் வந்து அருள்வாக்கு கேட்பது வழக்கம்.

ஒருநாள் அவனது அலுவலகத்திற்குப் போய் அவனிடம் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது அதே அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவர் அவனிடம் வந்து "சுவாமி என் மேசையில் வைத்திருந்த பேனா திடீரென்று காணாமல் போய்விட்டது. அது எனக்குத் திரும்பக் கிடைக்குமா?" என்றார்.

இவன் கண்ணை உருட்டிப் பார்த்துவிட்டு "அது உனக்குக் கிடைக்காது. புதிதாக வேறு வாங்கிக்கொள்" என்றான் 'சரி' என்று அவர் போய்விட்டார். அவர் போனதும் நான் மெதுவாக இவனைப் பார்த்து "அது எப்படி அது உனக்குக் கிடைக்காது என்று அவ்வளவு உறுதியாக அவரிடம் சொன்னாய்?" என்று கேட்டேன். இவன் மெதுவாக என் அருகே வந்து "அந்தப் பேனாவைக் கிளப்பியதே நான் தான்" என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மதித்து நடக்குமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

"சமீப வாரங்களில் இலங்கையில் வட பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் குண்டு வெடிப்புகள் காரணமாக பொதுமக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாட்டின் வட பகுதியில் கெப்பிட்டிக்கொல்லாவ என்னும் இடத்தில் பஸ்வண்டியொன்றின் மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 50க்கும் அதிகமான பொது மக்கள் கொல்லப்பட்டதுடன் 30க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துமுள்ளனர் . இவர்களில் அனேக சிறுவர்களும் அடங்குவர். கடந்த வாரத்தில் மாத்திரம் இடம் பெற்ற 16 குண்டு வெடிப்புச் சம்பவங்களிலும் இதர வன் செயல்களிலும் 60 வரையான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்".

சமீபத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு வெளியிட்டுள்ள பத்திரிகைக்குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும், "நாட்டின் சீரழிந்து வரும் நிலைமை குறித்தும் பொது மக்களைப் பெரிதும் பாதிக்கும் சம்பவங் கள் குறித்தும் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு (ஐ.சி.ஆர்.சி.) ஆழ்ந்த கவலை தெரிவிக்கின்றது. ஆயு தக்குழுக்களிடம் சர்வதேசமனிதாபிமானச் சட்டத்தின் கீழ் வரும் சட்டங்களை யும் அடிப்படைக் கொள்கைகளையும் மதித்து நடக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

1. பொது மக்களுக்கும் சண் டையிடுவோருக்குமிடையில் வேறு பாட்டை எப்பொழுதும் கவனத்தி லெடுக்க வேண்டும்.
2. நேரடித்தாக்குதல் சண்டையிடுவோருக்கும் இராணுவத்துக்கும் இடையே மாத்திரம் இருக்கவேண்டும்.
3.வித்தியாசங்களை சீர்தூக்கிப் பாராத வன்செயல் தடுக்கப்படவேண்டும் .
4. பொதுமக்களுக்கு உயிர்ச்சேதம் ஏற்படுவதைத் தடுக்க அல்லது இயன்றளவு குறைக்க சகல நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்படவேண்டும்.

ஆயுதப் போராட்டத்தின் போது பாதிக்கப்பட்டோருக்கு பாதுகாப்பளிக்கவும் உதவி செய்யவும் ஐ.சி.ஆர்.சி. அவசரகால நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் வடமுனை என்ற இடத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்கு இத்தாலிய செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து முதலுதவிச் சிகிச்சைகளை அளித்ததுடன் படுகாயமடைந்த ஏழு பேர்களை மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கும் எடுத்துச் சென்றுள்ளது. ஐ.சி.ஆர்.சி. பிரதி நிதிகள் மக்களுக்கு பாதுகாப்பளிக்கவும் சுகாதார உதவிகளை வழங்கவும் உறை விட வசதி மற்றும் தேவைப்படும் அவசர உதவிகளை வழங்கவும் தயாரான நிலையில் உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# பௌத்தவிகாரை அருகே தாக்குதல்; விடுதலைப் புலிகள் கண்டனம் !

(கொழும்பு)

பொலனறுவவில் சோமவதிய பௌத்த விகாரை அருகே உள்ள இராணுவம் மற்றும் பொலிஸாரின் காவலரண் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அடையாளம் தெரியாத இரு நபர்களால் கடந்த திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டது. இராணுவத்தினரும் திருப்பிச் சுட்டனர் . இதில் எவரும் காயமடையவில்லை. பௌத்த விகாரை மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் வெளியிட் டுள்ள அறிக்கையில்,

கிழக்கில் சோமவதிய விகாரை மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் எமக்கும் எதுவித தொடர்பும் இல்லை. இனமோதலை உருவாக்குவதற்காக படையினரே இத்தாக்குதலை நடத்தியிருக்கக்கூடும்.

படையினரால் நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களை தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் மீது சாட்டப்படுகின்ற பட்டியலில் இந்தத் தாக்குதலும் இணைந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத் தடைக்குப் பின்னர் மே 29 ஓமடியாமடுவில் 13 சிங்களத் தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். விடுதலைப்புலிகள் மீது அரசாங்கம் குற்றம் சாட்டியது. விடுதலைப் புலிகளுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில், அரச படைகளால் நடத்தப்பட்ட தாக்குதல் அது.

ஒஸ்லோ பேச்சுக்களுக்கு விடுதலைப் புலிகள் குழு புறப்பட்டுச் சென்ற நிலையில் யூன் 6ஆம்திகதி வெலிசறவில் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது. அரசாங்கம் எம் மீது குற்றம் சாட்டியது. நாம் அதை மறுத்தோம்.

ஒஸ்லோவிலிருந்து விடுதலைப் புலிகள் குழு திரும்பிய நிலையில் கெப்பிட்டிக்கொல்லாவவில் யூன் 15ஆம் திகதி கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டதில் 64 அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அச் சம்பவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லை. அரசாங்கம் எம்மீது குற்றம் சாட்டியது. விடுதலைப் புலிகளுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கை இது.

இந்த வரிசையில் விடுதலைப் புலிகளுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் கடைசியாக சோமவதிய விகாரை மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கும் எமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (து)

# வாசிப்போரின் தொகை குறைந்ததால் பயன்படுத்தப்படாதிருக்கும் நூல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வாசிப்பவர்களின் தொகை வெகுவாகக் குறைந்துள்ளமையினால் பொது நூலகங்களைப் பயன்படுத்துபவர்களின் தொகையில் பெரும் வீழ்ச்சி காணப்படுவதாக நூலகங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் பெறுமதிமிக்க தமிழ் , ஆங்கில நூல்கள் உரியவாறு பயன்படுத்தப்படாமல் இருப்பதாகத் தெரிய வருகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தினர் மட்டுமே வாசிப்புப் பழக்கத்தினைக் கொண்டுள்ளதால் பெரியளவில் பொதுநூலகங்களில் காணப்படும் நூல்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

மாவட்ட மட்டத்தில் பொதுமக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் வாசிப்பு வாரம் போன்ற நடவடிக்கைகள் அமுல் செய்யப்பட்டிருந்த போதிலும் கூட அவை பெரியளவில் பொது மக்கள் மத்தியில் போதிய ஆர்வத்தை ஏற்படுத்தவில்லை எனவும் அறியப்படுகின்றது. அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாணவர்கள் மத்தியிலும் கூட வாசிக்கின்ற ஆர்வம் இல்லாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. மேலும் உயர்தரப் பாடசாலைகளில் இயங்கிவருகின்ற நூலகங்களில் பயன்தரும் நூல்கள் இருக்கின்றபோதிலும் கூட அவற்றினை மாணவர்கள் எடுத்து வாசிக்கின்ற ஆர்வத்தைக் கொண்டுள்ளவர்களாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கிராமிய மட்டங்களில் செயல்பட்டு வருகின்ற சனசமூக நிலையங்களில் இருக்கக்கூடிய நூலகங்களைக் கூட அவ்வப்பகுதிகளில் இருக்கின்ற இளைஞர், யுவதிகள் சிறுவர் மற்றும் முதியோர்கள் பயன்படுத்துவதில்லை என அறியப்படுகின்றது.

பொதுமக்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் வாசிப்புப் பழக்கத்தினை அபிவிருத்திசெய்ய ஆவன செய்ய வேண்டும் என சமுதாய ஆர்வலர்களால் கூறப்படுகின்றது. (த-16)

# இலங்கையின் சமாதான முயற்சிக்கு சர்வதேச சமூகம் தொடர்ந்தும் ஆதரவு

## கோபி அனான் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகத்தின் பூரண ஆதரவு தொடர்ந்தும் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் மீண்டும் உறுதி செய்துள்ளார்.

புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள மனிதவுரிமைகள் பேரவையின் முதலாவது கூட்டத்தொடரில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசியல் இலாபம் மீட்டல்களிலும் கீழ்த்தரமான செயற்பாடுகளிலும் ஈடுபடுவதைதவிர்த்துக் கொள்ள வேண்டுமென்று பேரவையில் அங்கம் வகிக்கும் 47 மனிதவுரிமைகளுக்கான அமைச்சர்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-9)

# மனித உரிமை மீறல்களை விசாரிக்க இராணுவம் ஒத்துழைப்பு வழங்கும்

## யாழ். இராணுவத்தளபதி உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் மனிதவுரிமை மீறல்கள் பற்றி பொதுமக்கள் சரியான ஆதாரங்களுடன் தகவல்களை சமர்ப்பித்தால் குற்றவாளிகளுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கைஎடுக்கப்படுமென்று மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திர சிறி தெரிவித் துள்ளார்.


யாழ். மாவட்ட மனிதவுரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் அதிகாரிகளை சந்தித்த போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொதுமக்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்களை ஆராய்வதற்காக உயர் மட்டக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் படையினரும் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளும் சந்தித்து இந்த விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது என்றும் கட்டளைத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (ச-9)




## குளோஸின் அசத்தல் ஜேர்மனி அபார வெற்றி



நட்சத்திர வீரர் குளோஸ் இரண்டு கோல் அடித்து அசத்த, ஈக்வடோருக்கு எதிரான மூன்றாவது லீக் போட்டியில் ஜேர்மனி 3-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

லீக் சுற்றில் தொடர்ந்து மூன்றாவது வெற்றியை பெற்ற ஜேமனி 'ஏ' பிரிவில் முதலிடத்தைப் பெற்றது. நேற்று முன்தினம் குழு 'ஏ' பிரிவைச் சேர்ந்த ஜேர்மனி, ஈகுவடோர் அணிகள் மோதின. முதல் இரண்டு லீக் போட்டிகளில் வெற்றி பெற்ற இரு அணிகளும் ஏற்கனவே இரண்டாவது சுற்றில் நுழைந்துவிட்டன.

ஆட்டம் ஆரம்பமாகி 3ஆவது நிமிடத்தில் ஜேர்மனிக்கு கோனர் வாய்ப்பு கிடைத்தது. இதில் ஜேர்மனி வீரர் பாஸ்டியன் சுவீன்ஸ்டைகரிடம் பாஸ் பெற்ற மிரோஸ்



லாவ் குளோஸ் ஆட்டத்தின் முதல் கோலை 4ஆவது நிமிடத்தில் அற்புதமாக அடித்தார்.

5ஆவது நிமிடத்தில் கிடைத்த பிறி-கிக் வாய்ப்பை நட்சத்திர வீரர் மைக்கேல் பாலக் நழுவ விட்டார். தொடர்ந்து ஜேர்மனி வீரர்கள் அபாராமாக ஆடினர். 44ஆவது நிமிடத்தில் குளோசுக்கு அடித்தது மற்றொரு அதிர்ஷ்டம். மைக்கேல் பாலக் துல்லியமாக கொடுத்த பாசை பெற்றுக்கொண்ட குளோஸ் ஆட்டத்தின் இரண்டாவது கோலை அடித்து அசத்தினார். இத்தொடரில் இது வரை நான்கு கோல்கள் அடித்து அசத்தியுள்ளார் குளோஸ்.

முதல் பாதியில் ஈகுவடோருக்கு கோனர் வாய்ப்பு கூட அமையவில்லை. முதல் பாதியில் ஜேர்மனி 2-0 என்ற முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் ஈகுவடோர் வீரர்கள் முரட்டாட்டம் ஆடத் தொடங்கினர். கோல் அடிக்க கடுமையாகப் போராடிய அவர்களின் பிடியில் மைக்கேல் பாலக் சிக்கினார். ஆட்டத்தின் 51 வது நிமிடத்தில் ஈகுவடோர் லூயிஸ் அன்டோனியாவால்



பலமாக தாக்கப்பட்ட இவர் நிலைகுலைந்தார். இதன் காரணமாக லூயிசுக்கு மஞ்சள் அட்டை கிடைத்தது.

முரட்டுத்தனமாக ஆடிய ஈகுவடோருக்கு 57ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார் பொடோல்ஸ்கி. ஸ்னைடரிடம் பாஸ் பெற்ற பொடோல்ஸ்கி எளிதாக இலக்கை எட்டினார். இரண்டு கோல் அடித்து அசத்திய குளோசுக்கு பதிலாக 65 ஆவது நிமிடத்தில் நியூவில் களமிறக்கப்பட்டார்.

ஆட்டத்தின் 72 மற்றும் 74ஆவது நிமிடத்தில் கிடைத்த இரண்டு பிறி-கிக் வாய்ப்புகளை ஈகுவடோர் நழுவவிட்டது. ஈகுவடோர் இதேநிலையில் நீடிக்க ஜேர்மனி 3-0 என்ற கோல் கணக்கில் சிறப்பரன வெற்றி பெற்றது.

இவ்வெற்றியின் மூலம் குழு ஏ பிரி வில் ஜேர்மனி 9 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது. ஈகுவடோர் 6 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றது.

**அமிர்தன்**

## கடுமையான போராட்டத்திற்குப் பின் இங்கிலரந்து- சுவீடன் ஆட்டம் சமநிலை



இங்கிலாந்து, சுவீடன் அணிகளுக்கிடையிலான மூன்றாவது லீக் போட்டி இரு அணிகளின் கடும் போராட்டத்துக்குப் பின் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. இதன் மூலம் இரண்டாவது சுற்றில் எளிதாக நுழைந்தது சுவீடன்.

நேற்று முன்தினம் குழு 'பி' பிரிவைச் சேர்ந்தஇங்கிலாந்து, சுவீடன் அணிகள் மூன்றாவது லீக் போட்டியில் மோதின. முதல் இரண்டு லீக் போட்டிகளில் வெற்றி பெற்ற இங்கிலாந்து 6 புள்ளிகளும், ஒரு வெற்றி, ஒரு சமநிலையுடன் சுவீடன் அணி 4 புள்ளிகளும் பெற்று இருந்தன.

ஆட்டத்தின் முதல் நிமிடத்திலேயே இங்கிலாந்துக்கு நெருக்கடி ஆரம்பித்தது. முன்னணி வீரர் மைக்கேல் ஓவன் காலில் தசைபிடிப்பு ஏற்பட போட்டியிலிருந்து வெளியேறினார். அவருக்குப் பதில் மாற்று வீரராக பீட்டர் கிரவுச் களமிறங்கினார். சுவீடனுக்கு 16, 18 மற்றும் 19ஆவது நிமிடங்களில் கோனர் வாய்ப்பும், 22வது நிமிடத்தில் பிறி-கிக் வாய்ப்பும் கிடைத்தது. ஆனால் சுவீடன் வீரர்கள் அதை வீணாக்கினர்.

ஆட்டத்தின் 34ஆவது நிமிடத்தில் இங்கிலாந்தின் ஜோ கோல் அணிக்கு முன்னிலை பெற்றுத் தந்தார். 110 அடி தூரத்திலிருந்து கோல் லைனை நோக்கி அவர் அடித்த உதை சுவீடன் கோல் கீபர்பர் இசக்சனின் தடையை மீறி கோலானது. முதல் பாதியில் 1-0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து முன்னிலை பெற்றது. தொடர்ந்து போராடிய சுவீடனுக்கு ஆட்டத்தின் 51ஆவது நிமிடத்தில் அதிர்ஷ்டம் அடித்தது. சுவீடன் வீரர் லின்டோரத்தின் கோனர் கிக்கை பெற்றுக்கொண்ட மார்கஸ் அல்பாக் கோல் லைனை நோக்கி தலையால் முட்டினார். அதை தடுக்க நினைத்த இங்கிலாந்து வீரர் ரியோ பெர்டினான்டின் உதவியோடு அது சேம் சைட் கோலாக மாறியது. இதைக் கண்டு இங்கிலாந்து ரசிகர்கள் கொதித்துப் போயினர். உடனே ரியோ பெர்டினாட் வெளியேற்றப்பட்டு அவருக்குப் பதில் மாற்று வீரராக கேம் பெல் களமிறங்கினார். துடிப்புடன் ஆடிவந்த இங்கிலாந்தின் நட் சத்திரவீரர் வெய்ன் ரூனி 69 ஆவது நிமிடத்தில் வெளியேறினார். மாற்று வீரராக ஜெரார்டு இறங்கினார்.

85ஆவது நிமிடத்தில் ஜெரார்டுக்கு கிடைத்தது அற்புத வாய்ப்பு. ஜோ கோல் கொடுத்த துல்லியமான பாசை தலையால் முட்டி



கோலாக மாற்றினார்.

ஆட்டத்தின் கடைசி நேரத்தில் இங்கிலாந்தின் வெற்றிக்கு முட்டுக்கட்டை போட்டது சுவீடன். சுவீடன் வீரர் லின்டரோத்தின் கோனர் வாய்ப்பை பயன்படுத்திய ஹென்ரிக் லார்சன் 90 வது நிமிடத்தில் கோல் அடித்து ஆட்டத்தின் போக்கை மாற்றினார். இறுதியில் 2-2 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமநிலை ஆனது. குழு 'பி' பிரிவில் இங்கிலாந்து 7 புள்ளிகளுடன் முதல் இடத்தையும் சுவீடன் 5 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும் பெற்று இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தன.

## கோஸ்டாரிகாவுடனான ஆட்டத்தில் போலந்து ஆறுதல் வெற்றி



கோஸ்டாரிகாவுக்கு எதிரான மூன்றாவது லீக் போட்டியில் போலந்து 2-1 என்ற கோல் கணக்கில் ஆறுதல் வெற்றி பெற்றது. 18 ஆவது பிரிவைச் சேர்ந்த கோஸ்டாரிகா, போலந்து அணிகள் மோதின.

முன்னதாக நடந்த லீக் போட்டிகளில் தோல்வியடைந்த இரு அணிகளும் இரண்டாவது சுற்றில் நுழையும் வாய்ப்பை இழந்தன.

இப்போட்டியில் ஆறுதல் வெற்றியை மட்டுமே பெற முடியும் என்ற நிலையில் இரு அணிகளும் களமிறங்கின. ஆட்டம் ஆரம்பமாகி 25ஆவது நிமிடத்தில் கோஸ்டாரிகா முதல் கோல் அடித்தது. கோஸ்டாரிகா வீரர் ரொனால்ட் கோமஸ் பிறி-கிக்கில் கிடைத்த வாய்ப்பை கோலாக மாற்றினார். இதற்கு அடுத்த 8 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தது போலந்து. போரடாஸ் பொசாக்கி அடித்த அந்த கோல் இரு அணிகளையும் முதல் பாதியில் சமநிலை அடையச் செய்தது.

இரண்டாவது பாதியின் 66ஆவது நிமிடத்தில் போலந்து தனது வெற்றியை உறுதி செய்தது. இம்முறையும் கோல் அடிக்கும் வாய்ப்பை பொசாக்கி பெற்றார். ஜாசக் ரைனோவாக்கிடம் கோனரிலிருந்த பாஸ் பெற்ற பொசாக்கி இரண்டாவது கோல் அடித்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்க முயற்சித்த கோஸ்டாரிகா அணிக்கு பலன் எதுவும்



கிடைக்கவில்லை. இறுதியில் போலந்து 2-1 என்ற கோல் கணக்கில் ஆறுதல் வெற்றி பெற்றது. இதன்மூலம் 3 புள்ளிகள் பெற்ற போலந்து குழு 'ஏ' பிரிவில் மூன்றாவது இடத்தைப் பெற்று இரண்டாவது சுற்றுக்குள் நுழையும் வாய்ப்பை இழந்தது.

## பராகுவே ஆறுதல் வெற்றி

டிரினிடாட்டுக்கு எதிரான லீக் ஆட்டத்தில் பராகுவே 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. கெய்சர்ஸ்லாடர்னில்



நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் பரா குவே டிரினிடாட் அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் ஆட்டத்தின் முதல் கோலை பராகுவே பதிவு செய்தது.

ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்தில் கிடைத்த பிறி-கிக் வாய்ப்பை பராகுவே வீரர் ராபர்டோ அகுனா அடித்தார். அதை தடுக்க நினைத்தார் டிரினிடாட் வீரர் பிரன்ட் சான்கோ. ஆனால் அது சேம் சைட் கோலாக மாறியது. இதற்குப் பதிலடி கொடுக்க நினைத்த டிரினிடாட்டின் முயற்சிக்கு பலன் எதுவும் கிடைக்கவில்லை.

தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பராகுவே 86 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோல் அடித்து வெற்றியை தனதாக்கியது. பராகுவே வீரர் நெல்சன் குவேஸ் அடித்த அழகான உதை பராகுவே 2-0 என்ற கோல் கணக்கில் டிரினிடாட்டை வீழ்த்தியது. இப்போட்டியில் வெற்றி பெற்றாலும் முதல்



இரண்டு போட்டியில் தோல்வி அடைந்ததால் இரண்டாவது சுற்றில் நுழையும் வாய்ப்பை இழந்தது பராகுவே.

### இலங்கை நேரப்படி இன்றைய போட்டிகள்

| அணிகள் | இடம் | நேரம் |
|---|---|---|
| செக்குடியரசு - இத்தாலி | ஹம்பர்க் | 7.30 |
| கானா - அமெரிக்கா | நூர்ம்பெர்க் | 7.30 |
| ஜப்பான் - பிரேசில் | டார்ட்முண்ட் | 12.30 (நள்ளிரவு) |
| குரோசியா - அவுஸ்திரேலியா | ஸ்டுட்கர்ட் | 12.30 (நள்ளிரவு) |

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும்

# விஞ்ஞானத் துளிகள்

## பிறப்புரிமை பிறழ்வுகள் (Genetic disorders)

(சென்றவாரத் தொடர்ச்சி...)


### Down's Syndrome

இவர்கள் தமது உடலின் பிறப்புரிமை யமைப்பில் 21ஆவது சோடி நிறமூர்த்தத்தை மும்மடிய நிலையில் கொண்டுள்ளனர். ஒரு மடியமான சாதாரணமான முட்டைக்கலம் (பெண்) அசாதாரண நிலையில் 21ஆவது சோடி நிறமூர்த்தத்தை சோடியாகக் கொண்டிருப்பதால் இந்நிலை தோற்றுவிக்கப்படுகின்றது.


1866இல் John Landon Down முதன் முதலாக இந்நிலைமையை விபரித்தார். 1959இல் Jerome Lejeune என்பவர் இதனை முதன் முதலில் மனிதனில் கண்டு பிடித்தார்.

இந்நிலைமை பிறப்புரிமையில் உள்ளவர்கள் பின்வரும் இயல்புகளை தோற்றவமைப்புக்களாக வெளிப்படுத்துகின்றனர்.

- மந்தபுத்தி உடையவர்கள்
- கட்டையான உடல்
- ஒப்பீட்டளவில் சிறிய தலை
- விருத்தி குன்றிய வன்கூடு




Down Syndrom (படம்– 02)




படம்– 07

- நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள்
- கண்ணின் மேல் மடலில் ஓர் மடிப்பு ஏற்படுவதால் கண் பிளவு போன்று தோன்றும் (மொங்கோலியத் தோற்றம்)
- இதய விருத்திக் குறைபாடு உடையவர்கள்.

### Edward Syndrome

18ஆவது சோடி தன்னிறமூர்த்தம் மும்மடிய நிலையில் காணப்படுவதால் இந்நிலைமை தோற்றுவிக்கப்படுகின்றது. இவர்கள் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருக்கலாம்.

Child with trisomy 18



(படம்– 03)

இந்நிலையில் உள்ளோர் மிகவும் எண்ணிக்கையில்குறைவு. மேலும் பெரும்பாலும் பெண்களாகவும் உள்ளார்கள். 80-90% ஆனவர்கள் 2 வயதிற்குள் இறந்து விடுகின்றனர்.

இவர்கள் பின்வரும் இயல்புகளை வெளிப்படுத்துகின்றனர். சிறிய மூக்கு, வாய், பின்தள்ளப்பட்ட கீழ்த்தாடை (Elfin appearance) அசாதாரண காதுகள், விரல்களுக்கிடையிலான மடிப்புகள் நெருக்கமானவை.

இவர்கள் பொதுவாக அதீத சித்த சுவாதீனமற்றவர்கள்.

### Patau Syndrome

13ஆவது சோடி தன்னிறமூர்த்தம் மும்மடிய நிலையில் காணப்படுவதால் இந்நிலைமை தோற்றுவிக்கப்படுகின்றது. இவர்களின் இறப்புவீதம் முதலாம் வருடத்தில் மிகவும் உயர்வானதாகும். இவர்களை பின்வரும் தோற்றவமைப்பால் இனங்காண முடியும்.

- பிளவடைந்த அண்ணம்
- பிளவடைந்த உதடு
- இதய விருத்திக் குறைபாடு
- சித்த சுவாதீனம் உள்ளவர்கள்.

### Tuner's Syndrome

இது சோடி இலிங்கநிறமூர்த்தத்தில் ஒன்று குறைவடைவதனால் தோற்றுவிக்கப்படுகின்றது (XO). இவர்கள் பெரும்பாலும் பெண்கள் ஆவர். காரணம் இலிங்க நிறமூர்த்தம் தனிமைப்படுத்தப்பட்டு மீள இணையும் போது Y நிறமூர்த்தமின்றி தனியான ஒரு X நிறமூர்த்தம் மட்டும் முளையத்தில் காணப்படும். இதனால் பெண் இயல்புகள் வெளிப்படுகின்றது.

இவர்களை பின்வரும் இயல்புகளால் இனங்காண முடியும்.

- குள்ளமானவர்கள்
- சூலகம் அற்றவர்கள் - மலட்டுத்தன்மை
- அருகருகாக அமைந்த சிறிய முலைகள்
- சிறிய கருப்பை
- சாதாரண அளவிலும் பார்க்க செறிவு குறைந்த தலை முடி.
- பூப்படையாமை.

உலகில் 5000 பெண் குழந்தைகளில் ஒருவர் இந்நிலைமையைக் கொண்டுள்ளார்.



(படம்– 04)

### Klinedelter's Syndrome

இங்கு சோடி இலிங்க நிறமூர்த்த எண்ணிக்கை பிறப்புரிமை அமைப்பில் அதிகரித்து காணப்படும். (xxy அல்லது xxxy) இவர்கள் பெண்களின் இயல்புடைய ஆண்கள்.

இவர்களின் இயல்புகள் பின்வருமாறு,

- விந்து உருவாக்கப்படுவதில்லை- மலட்டுத் தன்மை
- விதைகள் பருமனில் அசாதாரணமாகச் சிறியவை.
- விவேகம் குறைந்தவர்கள்.
- மார்புப் பகுதி பெரிதாகவும் அசாதாரண உயரம் உடையவர்கள். முகத்தில் உரோம வளர்ச்சி குறைவானவர்கள்.
- பெண்களை ஒத்த குரல் உடையவர்களாகவும் இருப்பர்.

இந்நிலைமையானது பருவமடையும் வயதுவரை தோற்றவமைப்பில் வெளிப்படுத்தப்படுவதில்லை. இதன் நிகழ்தகவு 1/2000 குழந்தைகள் ஆகும்.



(படம்– 05)

திரு. யோகராஜா சிவயோகராஜன்
B.Sc. (Hons)

இந்நிலமையைத் தற்போது வாய்க் குழியிலிருந்து பெறப்படும் கலன்களை பரிசோதனைக்கு உட்படுத்தி Bar body யினை இனங்கண்டு உறுதி செய்யலாம்.

### Fragile - X Syndrome

பெரும்பாலான பரம்பரையான சந்ததிகளில் புத்தி குறைவான தன்மை இப்பிறழ்வால் தோற்றுவிக்கப்படுகின்றது. இதன் நிகழ்தகவு ஆண்களில் 1/1250 உம் பெண்களில் 1/2000உம் காணப்படுகின்றது.

இப்பிறழ்வில் தோற்றவமைப்புக்கான பேச்சுநடை, உச்சரிப்பு என்பன அசாதாரணமாக விளங்குகின்றன.

இந்நிலை சந்ததிகளுக்கூடாகவும் அறியப்பட்டுள்ளது. 20% ஆண்களில் இந்நிலைமை அவதானிக்கப்படினும் தோற்றவமைப்பில் வெளிப்படுத்தப்படுவதில்லை. ஆனால் அவர்களின் சந்ததிக்குரிய இன, குடும்ப பிள்ளைகளில் வெளிக்காட்டப்படுகிறது.

மேற்கூறியவை போன்று

*Criduchat Syndrome

* Ehlers- Danlas Syndrome

* Alagille Syndrome.

என பல்வகையான பிறப்புரிமையமைப்பு பிறழ்வுகள் உலகில் மனிதரிடையே தோற்றவமைப்புகளாகக் காணப்படுகின்றன.

(தொடரும்...)

---

# மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண்பது அரசாங்கத்தினால் முடியாத காரியம்

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைக்கும் வடக்கு- கிழக்கு யுத்தத்திற்கும் தீர்வு காண அரசாங்கத்தினால் முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் நன்கு உணரப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் திறனற்ற தன்மையாலும் தூரநோக்கற்ற செயல்களின் பிரதிபலன்களாலும் நாட்டு மக்கள் துரதிஷ்டமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தின் இந்த தவறான செயற்பாடு காரணமாக முழு சர்வதேச சமூகத்தினரதும் ஆதரவை இழக்கவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

இந்த நிலையில் சர்வதேச சமூகத்துடன் இணைந்து முன்நோக்கிச் செல்வதா? அல்லது ஜே.வி.பியுடன் இணைந்து நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்வதா என்று தீர்மானிக்கும் தீர்க்கமான காலகட்டத்தை அரசாங்கம் அடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (த-9)

## மினிபஸ் விபத்து

யாழிலிருந்து முகமாலை நோக்கி சென்றுகொண்டிருந்த மினிபஸ் றொட் உடைந்து பனைமரத்துடன் மோதியது.

இச்சம்பவம் கொடிகாமம் சந்திக்கண்மையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இவ்விபத்தில் ஒருவர் கால்முறிந்த நிலையிலும் ஐவர் சிறுகாயங்களுக்குள்ளான நிலையிலும் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து-133)

# வீதித் தடையினால் மக்கள் சிரமம்

கடந்த வாரம் யாழ் ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் சந்தியிலும் ஆரிய குளச்சந்தியிலும் மணியம் கட்டட 3ஆம் ஒழுங்கையிலும் இராணுவத்தினரால் ஏற்படுத்தப்பட்ட வீதித்தடையில் பொது மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகத் தெரிகிறது.

இவ்வீதித்தடைகள் முட்கம்பிகளினால் அமைக்கப்பட்டதுடன் மோட்டார் சைக்கிள், சைக்கிள், கார் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் செல்வதற்கு மாலை 6.00 மணி முதல் காலை 6.00 மணிவரையும் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தலுக்கமைய இவ்வீதியால் மோட்டார் சைக்கிள், சைக்கிள் பயணிகளைத் தவிர காரில் செல்லும் பயணிகள் இப்பாதை வழியே செல்ல முடியாதுள்ளது.

இப்பிரதான வீதியில் பிரபல்யமான வர்த்தக நிறுவனங்கள் அமைந்திருப்பதனால் இத்தடையினால் மக்கள் நடமாட்டம் குறைவடைந்து காணப்படுவதுடன் வர்த்தக நிறுவனங்களுக்கு பொருட்களை ஏற்றிவரும் வாகனங்களும் மாற்று பாதை வழியாக செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் வர்த்தகர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.


இவ்வீதித்தடையினால் மாற்றுப்பாதையாக பெருமாள் கோவில் வீதியையும் நாவலர் வீதியையும் பயன்படுத்த வேண்டியுள்ளது.

இவ்வீதி ஒடுங்கியதாக காணப்படுவதனால் அவ்வீதியினால் பாரிய வாகனங்கள் செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது. அவ்வீதியினூடாக இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டிகளும் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே சேவையினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. (து-133)

# கர்ம்வீரர் காமராஜர்

## மீள்பார்வை 04

முருக-தனுஷ்கோடி



நான் எதிர்பார்த்தபடியே அவன் படிப்பைத் தொடராமல் நிறுத்திவிட்டான் அரசியலில் தீவிரமாக ஈடுபடவும் ஆரம்பித்தான். நாளடைவில் என் மாணவன் காமராஜன், மரியாதைக்குரிய பாத்திரமான கனம் காமராஜர் ஆனார். அந்நிலையில் அவரைப் பலமுறை சந்திக்க நேர்ந்தது. அதே பழைய எளிமைக் கோலம், பழைய அன்பு, பணிவு எதுவுமே மாறவில்லை.

ஒரு நாள் விருதுநகருக்கு அவர் வந்திருந்தார். பல பெரிய அதிகாரிகள், இரண்டொரு மந்திரிகள், பல பெரிய பிரமுகர்கள் இத் தனை பேர் சூழ வந்தார் என் மாணவர். பழைய ஆசிரிய ரான நான் அங்கு இருந்தேன். என்னைக் கண்டவுடன் என் மாணவர் முகம் மலர்ந்தது. தம் அந்தஸ்து பதவி எல்லாவற்றையும் மறந்து எனக்கு முன்னால் கைகூப்பி வணங்கி சார் சௌக்கியமா? இங்கேதான் இருக்கிறீர்களா? என்று பணிவும் அன்பும் கலந்து விசாரிக்க ஆரம்பித்தார். சுற்றி நிற்பவர்களிடம் எங்க வாத்தியார் என்று அறிமுகம் செய்து வைத்தார். உண்மையிலேயே இதை நான் எதிர்பார்க்கவில்லை. என் கண்களில் நீர் சுரந்தது. அந்தப் பணிவும் அன்பும் இன்னும் மாறவில்லை. சென்ற மாதம் இங்கு வந்தார். அப்போதும் அவரைச் சந்திக்க நேர்ந்தது. அவரைக் காண்பதற்காக எத்தனையோ பெரிய மனிதர்கள் பக்கத்து ஊர்களில் இருந்தெல்லாம் வந்து காத்திருந்ததும் வழக்கம்போல் வணக்கத்துடன் என்னிடம் பேச ஆரம்பித்தார். சௌக்கியமா சார்? நலமாக இருக்கிறீர்களா? எனப் பல முறை கேட்டார். பிள்ளை களைப் பற்றியும், அவர்கள் வாழ்வைப் பற்றியும் விசாரித்தார். உங்களை மறக்கவே மாட்டேன் சார் அடிக் கடி விசாரித்துக்கொண்டிருக்கிறேன் சார் என்றார். எளிய குடும்பத்தில் பிறந்து உழைப்பால் உயர்ந்து நாடு போற்றும் நல்ல நிலையில் உள்ள உண் மைத் தொண்டர் என் மாணவர்! அவரை நினைக்கும் போது அவர் என் மாணவர் என்று சொல்லும் போது என் உள்ளம் பூரித்துப் பொங்குகிறது. இவ்வாறு தலைவர் காமராஜரைப் பற்றி அவரது ஆசிரியர் சற்குணம் கூறியதை நான் எடுத்துக் கூறிய தற்குக் காரணம் உண்டு. அவர் எனக்கும் ஆசிரியர். தொண்டராகப் பொது வாழ்க்கையைத் தொடங்கிய காமராஜர் தமது உழைப்பாலும் தியாகத்தாலும் பாரதம் போற்றும் பெருந் தலைவராக உயர்ந்த சரித்திரத்தினை இனி எழுதப்போவதால் எங்கள் ஆசிரியரின் தீர்க்க தரிசனத்தை இங்கு சுட்டிக் காட்டினேன்.

*2. அரசியல் தொண்டுகள்*

தலைவர் காமராஜரோடு நான் நெருங்கிப் பழகியது 1922ஆம் ஆண்டில் இருந்துதான். நாங்கள் இருவரும் ஒரே ஊர்க் காரர்கள் மட்டுமின்றி ஒரே தெருவைச் சேர்ந்தவர்களும் கூட. தலைவர்களின் தன்னாட்சி பற்றிய பேச்சுக்களை பத்திரிகைகளின் தன்னாட்சி பற்றிய பேச்சுக்களை பத்திரிகைகளில் படித்து அவரது உள்ளத்தில் நாட்டுப்பற்று ஊற ஆரம்பித்தது. நகரில் நடைபெறும் பல பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்டார். சில நாட்களில் அவரே பொதுக் கூட்டங்களைக் கூட்டினார். அரசியல் கிளர்ச்சிகளில் அவர் உள்ளம் ஈடுபட ஆரம்பித்தது. தமிழ்நாடு காங்கிரஸில் உறுப் பினராகச் சேர்ந்தார். காங்கிரஸ் பிரச்சாரத்துக்கு மக்களின் ஆதரவைத் திரட்டினார். ரயில் நிலையங்களில், பொது இடங்களில், கடை வீதிகளில், உண்டி ஏந்தி நிதி வசூலித்தார். காங்கிரஸ் கூட்டங் களைக் கூட்டிதேச பக்தியை வளர்க்கும் பணியில் ஈடுபட்டார்.

அப்போது என்போன்ற பள்ளி நண்பர்கள் பலர் மாலை நேரங்களில் ரயில் நிலையத்திற்கு அருகில் உட்கார்ந்து அவரிடம் அரசியலைப் பற்றிக் கேட்போம். அவரும் நாட்டு நடப்பை விளக்கமாகச் சொல்லுவார். பத்திரிகையில் வந்த செய்திகளையும் அரசியல் தலைவர்களைப் பற்றியும் எங்களுக்கு உடனுக்குடன் சொல்லி அரசியல் வகுப்பே நடத்துவார். தலைவர் கூட்டிய சில கூட்டங்களில் கல்வீச்சு நடந்ததும் உண்டு. எதிர்ப்பைக் கண் டு பின்வாங்கி யதே இல்லை அவர். எதிர்ப்பு அதிகமாக அதிகமாக உற்சாகமே அவருக்கு எற்பட்டது. ஜஸ்டிஸ் கட்சி யின் கோட்டை என விருது நகரைச் சிலர் கூறினார்கள். அவர்களின் மனக்கோட்டை இடிய ஆரம் பித்தது. ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டங்களுக்கு நண்பர்களை அனுப்பி அங்கு பேசப்படுவதை தெரிந்து கொண்டு காங்கிரஸ் கூட்டத்தில் பதிலடி தரத் தலைவர் என்றும் தவறியதே இல்லை.

ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்துக் காங்கிரஸ் கூட்டம் கூட்டித் தேசபக்தியை அவர் ஊட்ட ஆரம்பித்ததால் விருதுநகர் பொலிஸின் கண் தலைவர் மீது பட்டது. விருது நகர் பொலிஸார் தலைவரைக் கண்காணிக்க ஆரம்பித்தனர். ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள சிலர் உயர் பொலிஸ் அதிகாரிகளை அணுகி இந்தக் கண் காணிப்பு நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்தனர். பக்கத்து ஊர்களிலும் தலைவர் காமராஜ் கூட்டங்களைக் கூட்டிக் கலந்து கொண்டார். மாலை 6 மணிக்கு விருதுநகருக்கு அருகிலுள்ள கிராமங்களுக்குப் புறப்படுவோம். இரவில் கிராமத்தில் நடை பெறும் கூட்டத்தில் என்னையும் நண்பர்களையும் பேசச்சொல்லுவார். எங்களில் அப்துல் ரஹ்மான் என்ற நண் பர் நன்றாகப் பாடுவார். அவரை மேடையில் ஏற்றித் தலைவர் பாடச் சொல்லுவார். அப் துல் ரஹ்மான் பாட்டுப்பாட ஆரம்பித்ததும் தலைவரை நாங்கள் பார்ப்போம். ரஹ்மானின் குரல் உச்சக் கட்டத் துக்கு ஏற ஏறக் கூட்டம் களை கட்டும். பாட்டு முடியும் போது உணர்ச்சி வெள்ளத்தில் மிதக்கும் மக் களை நோக்கி மகாத்மாகாந் திக்கு என்று தலைவர் உரக்க குரல் கொடுப்பார். "ஜே" என்ற குரல் மக்க ளிடம் இருந்து ஒருமித்து வரும். அவரையே பார்த்துக்கொண்டிருக்கும் முத்து சாமியையோ என்னையோ அப்போதுதான் தலைவர் பார்ப்பார். போ போய் பேசு என்று கட்டளை இடுவார். நாங்கள் பேசுவோம். கூட்டம் முடிந்த பிறகு சில கிராமங்களில் சாப்பாடு போட்டும் அனுப்பு வார்கள். சாப்பாடு போடாமல் சிலர் பச்சைத் தண்ணீரைக் கொடுத்தும் வழியனுப்பி வைப்பார்கள். இரவு 12 அல்லது 1 மணிக்கு விருதுநகர் வந்து சேருவோம்.


இதற்கிடையில் தலைவர் காமராஜ் அடிக்கடி அரசியல் விஷயமாக வெளியூர் போய் வருவார். மது ரைக்கு அடிக்கடி போவார். மதுரைக்கும் விருதுநகருக்கும் உள்ள தூரம் 27 மைல். பக்கத்துக் கிராமங்களில் கதர் விற்கும் தேசியப் பணியில் தலைவர் ஈடுபட்டார். அந்த வயதில் அவர் மேற்கொண்ட தேசியப் பணி ஜஸ்டிஸ் கட்சியினருக்குச் சவாலாக அமைந்தது.

*கல்யாண ஏற்பாடு*

1920 ஆம் ஆண்டு காங்கிரஸ் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் தலைவர் ஈடுபட்டார். ஒத்துழையாமை இயக்கத்தை காந்திஜி திடீரென நிறுத்திவிட்டார். அந்த இயக்கம் தமிழ் நாட்டில் நிறுத்தப் படவில்லை என்பதைக் காட்ட கள்ளுக்கடை மறியலில் காங்கிரஸ் தொண்டர்கள் ஈடுபட்டனர்.

தலைவர் போராட்டங்களில் தீவிரமாக ஈடுபடுவது தாயார் சிவகாமி அம்மையாரைக் கலங்கச் செய்தது. ஏக புத்திரன் அல்லவா? சிறையில் வாடினால் பெற்ற மனம் எப்படி இருக்கும்? அந்த ஒரே புதல்வனால் தான் குடும்பம் பெருகிப் பேர் சொல்ல வேண்டும். ஆகவே கல்யாணமாவது செய்து வைத்து விட்டால் கட்டுப்பாட்டுக் குடும்பத்தில் ஐக்கியமாகி விடுவார் என்று தாயாரும் தாய் மாமன் கருப்பையா நாடாரும் எண்ணினார்கள். இதைத்தொடர்ந்து கல்யாணத்துக்கு ஏற்பாடும் செய்தார்கள். பெண்ணும் பார்த்துக் கல்யாணத் தேதி குறிப்பிடும் அளவுக்கு நிலைமை வளர்ந்தது. வெளியூர் சென்றிருந்த தலைவர் வீடு திரும்பியதும் கல்யா ண ஏற்பாடுகளை நேரில் கண்டார் அவ்வளவுதான்! தாய் நாட்டின் விடுதலைமீது கொண்டிருந்த தரகம் தாயென்றும் பாராது சீற வைத்துவிட்டது. (தொடரும்)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி



கோண்டாவில் சி.பி கணனி நிறுவனத்தின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு நிறுவனத்தின் சார்பில் உதவித் தொழில் ஆணையாளர் சி.முத்துக்குமாரசாமி கல்லூரி அதிபர் பொ.கமலநாதனிடம் ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பாக வழங்குவதையும் அருகில் சி.பி கணனி நிறுவனப் பணிப்பாளர் இ.சுகுமார், சி.பி கட்டட உரிமையாளர் எஸ்.மகேந்திரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## மின் மாணிகள் பொருத்துவதில் பாரபட்சம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் பகுதியில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ள வீடுகளுக்கு ஒரு வருடம் ஆகிய நிலையிலும் கூட இன்னமும் மின் மாணிகள் பொருத்தப்படவில்லை.

இதன் காரணமாக குறித்த வீட்டு உரிமையாளர்களுக்கு இலங்கை மின் சார சபையினால் மாதாந்தம் குறிப்பிட்ட அளவு தொகையே மின் கட்டணமாக மின் பாவனைப் பற்றுச் சீட்டில் குறிக்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில்மின்மாணிகள் பொருத்தப்படாத வீடுகளுக்கு மாதாந்தம் ரூபா 400 முதல் ரூபா 450 வரை கட்டணமாகக் குறித்து அனுப்பப்படுகின்றது.

இது குறித்து இலங்கை மின் சார சபை அதிகாரிகளிடம் கேட்ட போது மட்டுவில் பகுதி மின் பாவனையாளர்களுக்கான மின் மாணிகள் இன்னமும் வந்துசேரவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

ஆயினும் கூட மட்டுவில் பகுதிக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்ட பின்னர் மின் இணைப்பு வழங்கப்பட்ட வேறு கிராமங்களிலுள்ள வீடுகளுக்கு மின் மாணி கள் மின்சார சபையினால் பொருத்தப்பட்டுள்ளன. மட்டுவில் பகுதி மின் இணைப்பாளர்களுக்கு மட்டும் மின்மாணிகள் ஒரு வருடம்சென்ற நிலையிலும் பொருத்தப்படாமை குறித்து மின் பாவனையாளர்கள் மிகுந்த அதிருப்தியும் விசனமும் அடைந்துள்ளனர்.

மின் இணைப்பு வழங்கப்பட்ட வீடுகளுக்கு இன்னமும் மின்மாணிகள் பொருத்தப்படாமைக்கான அடிப்படைக் காரணம் தெரியாமல் இருப்பதாக மட்டுவில் பகுதி மின்பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-16)

## வாகன நெருக்கடியால் மக்கள் அவலம்

(யாழ்ப்பாணம்)

சமீப காலமாக யாழ். குடாநாட்டில் எரிபொருளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு நீங்காத நிலையில் டீசலுக்காக எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு முன்னால் மினி பஸ், பஸ், லொறி, வான் முதலிய வாகனங்கள் நீண்ட நேரம் காத்துக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கஸ்தூரியார் வீதியில் உள்ள எரிபொருள் விற் பனை நிலையத்தின் முன்னால் டீசல் நிரப்புவதற்காக மேற்குறிப்பிட்ட பெருந் தொகையான வாகனங்கள் கஸ்தூரியார் வீதியிலும், ஸ்ரான்லி வீதியிலும் தெருவை அடைத்து நிறுத்தப்படுவதால் அவ் வீதி வழியே பொது மக்கள் வாகனங்களில் பயணிப்பதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த எரிபொருள் விற்பனை நிலையத்தில் ஒரு வாகனத்துக்கு பத்து லீற்றர் டீசல் மாத்திரமே வழங்கப்படுவதாகத் தெரிகிறது. (து-133)

## பயிற்சிக் கருத்தரங்கு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 25ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடாத்தப்படவுள்ள வடமராட்சி, தென்மராட்சி பிரதேச ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத் தரங்கு பிற்போடப்பட்டுள்ளது.

அன்றைய தினம் தர்ம ஆசிரியர்களுக்கான பரீட்சை நடைபெறுவதனால் இப் பயிற்சிக்கருத்தரங்கு யூலை மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளதாக சமூக சேவை, சமூக நலத்துறை அமைச் சின் யாழ். மாவட்ட இணைப்பாளர் கே. நாகராஜா தெரிவித்தார். (து-133)

## வங்கி நடவடிக்கையால் மக்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர மத்தியில் இயங்கும் பிரபல்ய வங்கி ஒன்றில் கடந்த தினங்களாக வங்கிக்குச் செல்லும் வாடிக்கையாளர்கள் உடற் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

கடந்த சில நாட்களாக குடாநாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேற்படி வங்கியில் பரிசோதனையை மேற்கொள்ளும் வங்கியின் பாதுகாவலர் தெரிவித்தார்.

இந்நடவடிக்கையினால் வாடிக்கையாளர்கள் மனச் சஞ்சலம் அடைந்த நிலையில் எங்களது பண வைப்பினால் இயங்கும் இவ் வங்கி எங்களை மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவது அவமானத்தை ஏற்படுத்தும் செயல் என தெரிவிக்கிறார்கள். (து-133)

## மணவாளக் கோல விழா

(துன்னாலை)

கரவெட்டி சாமியன் அரசடி ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக்கோல விழா எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணியளவில் நடைபெறவுள்ளது.


அன்றைய தினம் 108 சங்காபிஷேக நிகழ்வும் விசேட பூசையும் இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார் எனவும் மகேஸ்வர பூசை இடம்பெறும் என ஆலய நிர்வாகி ந. அருளானந்தமூர்த்தி அறிவித்துள்ளார். (த-101)

## நிரந்தர நியமனம்

(துன்னாலை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் வதிரி முன்பள்ளி ஆசிரியர் உ.நிருபாவுக்கு வடக்கு-கிழக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சினால் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் இவர் அமைய அடிப்படையில் பணி புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-101)




பிலிப்பைன்ஸ் தலைநகர் மனிலாவில் அதிபருக்கு எதிராக பெண்கள் போராட்டம் நடத்தினர்

# நாதுலாகணவாய் திறக்கப்பட்டால் இருதரப்பு உறவு மேம்படும் - சீனா

(பீஜிங்)

வர்த்தகத்திற்காக நாதுலா கணவாய் திறக்கப்படுவதன் மூலம் இந்தியா சீனா இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் இருதரப்பு உறவுகள் மேம்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

என்று சீனா கருத்து தெரிவித்துள் ளது. இந்தியா-சீனா எல்லையில் வர்த்தகத்துக்காக பயன்பட்டு வந்த நாதுலா கணவாய் கடந்த 1962 ஆம் ஆண்டு போரின் போது மூடப்பட்டது. கிழக்கு சிக்கிம் மற்றும் திபெத் மலைப் பகுதியில் கடல் மட்டத்தில் இருந்து நான்காயிரத்து 545 மீற்றருக்கு மேலே அமைந்துள்ளது. நாதுலா கணவாய் திபெத்தின் லாசா நகரில் இருந்து 460 கி.மீ துரத்திலும் கொல்கத்தாவில் இருந்து 550 கீ.மீ தூரத்திலும் உள்ளது.

வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்தது இக்கணவாய். 44 ஆண்டுகளுக்கு பின்னர் தற்போது திறக்கப்படுவதால் சரக்கு போக்குவரத்து மூலம் வர்த்தகத் துறையினரும் உள்ளூர்பொருளாதாரமும் வளமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. சீன வெளியுறவு அமைச்சு செய்தித் தொடர்பாளர் ஜியாங்வூ நாதுலா கணவாய் திறப்பு குறித்து கருத்து தெரிவிக்கையில், நாதுலா கண வாய் திறக்கப்படுவதன் மூலம் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் இருதரப்பு உறவுகள் மேலும் வலுப்படும்

இரு நாடுகளையும் சேர்ந்த மலைப் பகுதிகளின் கிராமப் பொருளாதாரம் முன்னேற்றம் அடையும். பொருளாதார ரீதியாக வெளியுலகில் இருந்து தனிமைப்பட்டிருந்த நிலைமை முடிவுக்கு வந்துள்ளது.

இப்பகுதியில் சந்தை பொருளாதாரம் வளர்வதற்கு இந்த நடவடிக்கை முக்கிய பங்காற்று.ம் போக்குவரத்து கட்டுமானம் மற்றும் சேவைத் துறைகளுக்கு ஊக்கம் கிடைக்கும் என்றார். (கு)

WORLD NEWS உலக தரிசனம்

# கடத்தப்பட்ட அமெ. இராணுவத்தினர் தலை துண்டிக்கப்பட்டுக் கொலை

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட அமெரிக்க வீரர்கள் தலை துண்டித்து கொலை செய்யப்பட்டனர். புதியதாக பதவிக்கு வந்த அல்குவைதா தலைவர் முன்னிலையில் இந்த தண்டனை நிறைவேற்றப்



பட்டது.

ஈராக்கில் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் அமெரிக்கப் படையனருக்கு எதிராக தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். கடந்த வாரம் அமெரிக்க படையினர் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஈராக்கில் செயல்பட்டு வந்த அல்குவைதா தீவிரவாதிகளின் தலைவன் சர்காவி சுட்டுக் கொல்லப்பட்டான். இதைத் தொடர்ந்து ஈராக் அல்குவைதாதீவிரவாதிகளின் புதிய தலைவன் நியமிக்கப்பட்டான்.

கடந்த வாரம் தீவிரவாதிகளுக்கும் அமெரிக்கப் படையினருக்கும் இடையே நடந்த சண்டையின் போது கிறிஸ்டியன் மென்சாக்கா தாமஸ் டக்டர் என்ற 2 அமெரிக்க வீரர்களை தீவிரவாதிகள் கடத்திச் சென்று விட்டனர். அவர்களின் கதி என்ன என்பது தெரியாமல் இருந்தது. 8000க்கும்மேற்பட்ட கூட்டுப்படையினர் அந்த 2 வீரர்களையும் தேடிவந்தனர்.

இந்த நிலையில் தேடப்பட்ட 2 அமெரிக்கர்களின் உடல்கள் பக்தாத் புறநகர் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களது தலை துண்டிக்கப்பட்ட நிலையில் கிடந்தது. புதிய அல்குவைதா தலைவன் முன்னிலையில் நிறைவேற்றப்பட்ட முதல்மரணதண்டனை இது என்று தீவிரவாதிகள் எழுதி வைத்த குறிப்பும் அந்த உடல்களின் அருகே கிடந்தது.

ஆடு வெட்டும் கத்தியாலும் அவர்களது கழுத்து அறுக்கப்பட்டதாகவும் தீவிரவாதிகள் தெரிவித்திருந்தனர். (கு)

# வெள்ளத்தில் மிதக்கும் ஹூஸ்டன் நகரம்

அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஹூஸ்டன் நகரம் வெள்ளத்தில் மிதக்கிறது. வெள்ளநீர் பாய்ந்தோடுவதால் முக்கிய நெடுஞ்சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளன .

வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் அதிகம் வசிக்கும் பகுதி ஹூஸ்டன் அமெரிக்காவில் ஒவ்வெரு ஆண்டும் சூறாவளி தாக்குதல் நடக்கும் போதும் ஹூஸ்டன் நகரம் கடும் மழையில் சிக்கி தவிப்பது வழக்கம். இந்த ஆண்டும் கடந்த சில நாட்களாக ஹூஸ்டன் நகரில் கடும் மழை பெய்தது. இதனால் நகரின் பல பகுதிகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஏரிகள் நிரம்பி வழிந்து சாலைகளில் தண்ணீர் செல்வதால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை முதல் நிலைமை மோசமடைந்துள்ளது. வெள்ள நீர் சூழ்ந்து கொண்டதால் மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி நகர நிர்வாகம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். கடந்த சிலநாட்களில்ஹூஸ்டன் நகரில் 28 செ.மீ.மழை பெய்துள்ளது. ஹூஸ்டனின் தெற்குபகுதியில் வெள்ள நீர் சூழ்ந்து கொண்டதால் வீடுகள் மற்றும் கார்களில் சிக்கிய மக்கள் மீட்பு படையினறால் மீட்கப்பட்டனர். அப்பகுதியில் தற்போது அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு முதல் மூன்று அடி உயரத்துக்கு தண்ணீர் தேங்கியுள்ளதால் ஏராளமான மக்கள் வீடுகளில் கூரைகளின் மீதேறி அமர்ந்துள்ளனர். (கு)

# ஆங்சான் சூகியை விடுவிக்குமாறு அமெரிக்கா மீண்டும் கோரிக்கை

மியான்மரில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள தேசிய ஜனநாயக லீக் கட்சியின் தலைவர் ஆங்சான்சூகியை விடுதலை செய்ய வேண்டும் என்று அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

மியான்மரில் இராணுவ ஆட்சி நடைபெறுகிறது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து. அங்கு ஜனநாயக ஆட்சியைக் கொண்டு வர வேண்டும்என்றுகடந்த2003ஆம்ஆண்டு மே மாதம் தனது ஆதரவாளர்களுடன் தேசிய ஜனநாயக லீக் கட்சியின் தலைவர் ஆங்சான் சூகி நாடு தழுவிய போராட்டத்தில் ஈடுபட்டார். அதனால் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரான சூகியின் வீட்டுக்காவலை, மேலும் ஓர் ஆண்டுக்கு நீடித்து கடந்த மே மாதம் இராணுவ ஆட்சி உத்தரவிட்டது. இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை, சூகியின் 61 ஆவது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. அப்போது அவரை விடுவிக்கக் கோரி உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் அமைதிப் பேரணி நடைபெற்றது. அமெரிக்காவும் சூகியை விடுவிக்க வேண்டும் என்று மீண்டும் கோரியுள்ளது. இதுகுறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக் கையில்,

ஆங்சான்சூகி உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் மியான்மர் இராணுவ அரசு விடுவிக்க வேண்டும். சூகியின் மனோதைரியமும் துன்பத்திலும் பொறுமையுடன் உலகின் அனைத்து பகுதியிலும் சுதந்திரம் மற்றும் நீதி கோருபவர்களுக்கு ஊக்கமளிக்கும். சர்வதேச சமுதாயமும் ஐக்கிய நாடுகள் சபையும் தங்கள் பொறுப்பை உணர்ந்து மியான்மர் மக்களின் துன்பத்தை களைவதற்கு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (கு)

# கைதிகள் சிறைப்பிடித்த 250 பேரும் விடுவிப்பு!

பிரேசிலின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள வியன்னாவில் சிறையில் ஏற்பட்ட வன்முறையில் கைதிகளால் பிணைக் கைதிகளாக பிடித்துவைக்கப்பட்ட 250 பொது மக்கள் விடுவிக்கப்பட்டனர். இவர்களில் 214 பெண்களும் 10-க்கும் மேற்பட்ட குழந்தைகளும் அடங்குவர். இவர்கள் அனைவரும் சிறைக்கைதிகளைப் பார்க்க வந்தவர்கள். பிரேசிலில் சாவோ பவ்லோ மாவட்டத்தில் உள்ள சிறையில் ஒரு மாதத்திற்கு முன் சிறைக் கும்பல் நடத்திய தாக்குதலில் பொலிஸார்உட்பட170பேர்கொல்லப்பட்டனர்.

இதையடுத்து சிறையில் இருந்த குழுக்களின் முக்கிய தலைவர்கள் வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டனர். இதனால் வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டவர்களை திரும்ப கொண்டு வரக்கோரியும் சிறையின் நிலை மோசமாக உள்ளதாகவும் கூறி கைதிகள் கடந்த புதன்கிழமை முதல் வன்முறையில் ஈடுபட்டனர்.

மேலும் கைதிகளைப் பார்ப்பதற்காக வந்த பொதுமக்கள் 250பேரை அவர்கள் பிணைக்கைதிகளாக பிடித்துவைத்தனர். சிறையில் வன்முறை முடிவுக்கு வந்ததையடுத்து பிணைக்கைதிகளாக பிடித்துவைக்கப்பட்ட அனைவரும் கடந்த திங்கட்கிழமை விடுவிக்கப்பட்டனர். கைதிகளுக்கு எந்த சலுகையும் அளிக்கப்படவில்லை என்று அரசுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னர் நடைபெற்ற வன்முறையில் 2 கைதிகள் கொல்லப்பட்டு சிறைக்கு வெளியே உள்ள சுவரில் தொங்கவிடப் பட்டிருந்தனர். அவர்களில் ஒருவர் தலை துண்டிக்கப்பட்டுக்கிடந்தார். (கு)

# 15 தீவிர வாதிகள் பலி

ஈராக் தலைநகர் பக்தாத்தில் ஒரே நாளில் பல இடங்களில் அமெரிக்க இராணுவ தீவிரவாதிகளின்தேடுதல் வேட்டை நடத்தியது. இதில் அல்குவைதா தீவிரவாதிகளுடன் தொடர்பு உடைய 15 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

தீவிரவாதிகள் நடமாட்டம் அதிகம் உள்ள பக்பா நகரில் இந்த தேடுதல் வேட்டை நடந்தது. அப்போது பதுங்கியிருந்த தீவிரவாதிகள் இராணுவம் மீது தாக்குதல் நடத்தினர். இராணுவமும் பதிலடி கொடுத்தது. இதில் வீட்டின் கூரை மீது நின்று தாக்குதல் நடத்திய 9 தீவிரவாதிகள் பலியானார்கள் அடுத்த கட்டடத்தில் இருந்து இராணுவத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். அவர்கள் மீது நடத்தப்பட்ட பதில் தாக்குதலில் 3 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

தரைப்படைக்கு உதவியாக போர் விமானங்களும் இந்த வேட்டையில் ஈடுபடுத்தப்பட்டன. ஒரு போர் விமானத்தை தீவிரவாதிகள் சுட்டனர். விமானத்தை தாக்கியவர்கள் மீது இன்னொரு விமானத்தில் இருந்த இராணுவ வீரர்கள் சுட்டனர். இதில் 3 தீவிரவாதிகள் பலியானார்கள். (கு)



ஜேர்மனிக்கும் ஈக்குவடோர் நாட்டிற்குமிடையே நடைபெற்ற கால் பந்து போட்டியை, ஜேர்மன் நகரான ஸ்டுட்கர்டில் திறந்த வெளியில் அமைக்கப்பட்டிருந்த திரையில் சுமார் 40 ஆயிரம் ரசிகர்கள் பார்த்து மகிழ்ந்தனர்.

> நியாயத்திற்காகவும் தர்மத்திற்காகவும் பொது ஜன அபிப்பிராயத்தையும் எதிர்த்து நிற்கத் தயாராக வேண்டும்.
>
> -சாக்ரட்டிஸ்

வலம்புரி

## விடுதலைப்புலிகளின் பதில் சமாதானத்தை வலியுறுத்துகிறது

நோர்வேயினால் கொடுக்கப்பட்ட கேள்விக் கொத்துக்கு விடுதலைப்புலிகள் பதிலளித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளால் நோர்வே அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பதிலில்,

- போர்நிறுத்த உடன்படிக்கையில் பற்றுறுதி.
- நோர்வேயின் அனுசரணைப்பணியை ஏற்றுக் கொள்ளல்.
- கண்காணிப்பாளர்களின் பாதுகாப்பிற்கான உறுதி.

என்பவற்றிற்கு உத்தரவாதம் வழங்கியுள்ளனர்.

நோர்வேயரசுக்கு விடுதலைப்புலிகள் வழங்கிய மேற்போந்த உத்தரவாதத்தின் ஊடாக சமாதானத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள பற்றுறுதியை மீண்டும் ஒரு தடவை உறுதி செய்துள்ளனர்.

எனவே சமாதானப் பணியை முன்னெடுப்பதில் விடுதலைப்புலிகள் தரப்பால், நோர்வே அரசுக்கு முழுமையான ஆதரவு கிடைத்துள்ளது.

அதேநேரம் நோர்வேயின் கேள்விகளுக்கு இலங்கையரசு வழங்கிய பதில் எத்தன்மையது என் பது வெளிப்படுத்தவில்லையாயினும்,

நோர்வேயின் அனுசரணைப்பணியை ஏற்றுக் கொள்வதாகவே அரசு அறிவித்துள்ளது.

நோர்வேயின் அனுசரணைப்பணியை அரசும் விடுதலைப்புலிகளும் ஏற்றுக் கொள்வதாக அறிவித்திருந்தாலும் அவை இரண்டும் ஒரே பெறுமானம் உடையவையல்ல.

ஏனெனில் இலங்கை அரசைப் பொறுத்தவரை தனித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எடுக்கின்ற முடிபை அரசின் கூட்டணிக்கட்சிகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளும் எனக் கூற முடியாது.

குறிப்பாக நோர்வேயின் அனுசரணைப்பணியை ஜே.வி.பி.கடுமையாக எதிர்க்கின்றது. ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்கும் ஒரு கட்சி - ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுடன் உடன்படிக்கை செய்து கொண்ட கட்சியான ஜே.வி.பி., நோர்வேயின் அனுசரணைப்பணியை எதிர்க்கும் விடயத்தை சாதாரணமானதாக எடுத்துக் கொள்ள முடியாது.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக ஜே.வி.பியும் மகிந்த ராஜபக்ஷவும் செய்து கொண்ட உடன்படிக்கையில், சமாதான அனுசரணைப் பணியிலிருந்து நோர்வேயை வெளியேற்றுவதும் ஒரு விடயமாகும்.

அவ்வாறாயின் நோர்வேயின் சமாதான அனுசரணைப்பணியை இலங்கையரசு ஏற்றுக் கொள்கின்றது எனக் கூறுவது நம்பத் தகுந்தது அல்ல என்பதற்கு மேற்போந்த விடயங்கள் போதுமான எடுத்துக் காட்டாகும்.

ஆனால், விடுதலைப்புலிகளின் தலைமை எடுக்கின்ற முடிபில் எந்த மாற்றமும் இருக்க முடியாது என்பது தெளிவு.

எனவே அரசு, விடுதலைப்புலிகள் ஆகிய இரு தரப்பிடமும் கேள்வியெழுப்பிய நோர்வேக்கு இலங்கையரசிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பதில் திருப்தியானதாக இருக்க முடியாது.

எதுவாயினும் நோர்வேயின் கேள்விகளுக்கு விடுதலைப்புலிகள் அளித்துள்ள பதில் சமாதானத்தை வலியுறுத்துவதானதென்பதை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ள முடியும்.

# பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர் அனைவருக்கும் சர்வதேச உதவிகள் கிடைக்க வேண்டும்

## வலியுறுத்துகிறது 'தினமணி' நாளேடு

(சென்னை)

இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் சர்வதேச உதவிகள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் ''தினமணி'' நாளேடு வலியுறுத்தியுள்ளது.

தினமணி நாளேட்டில் நேற்றைய தினம் எழுதப்பட்டுள்ள தலையங்கத்தில் நோர்வே அரசின் முயற்சியால் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்று வந்த சமரச முயற்சிகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டு பேச்சுவார்த்தை தொடர முடியாமல் போனதை அடுத்து இலங்கையில் பதற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அங்கு அடுத்தடுத்து நிகழ்ந்து வரும் தாக்குதல் சம்பவங்கள், இலங்கையில் கடந்த காலத்தில் ஏற்பட்ட போர்ச் சூழலை மீண்டும் கொண்டு வந்து விடுமோ என்ற கவலையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கிடையே இலங்கையின் வட-கிழக்குப் பகுதியில் உள்ள தமிழர்கள் தங்களது உயிருக்குப் பயந்து, படகுகள் மூலம் தமிழகத்துக்கு அகதிகளாக வருவது தொடர்கிறது.

இலங்கையின் அமைதிக்கு வழிகாண இந்திய அரசு ஆவன செய்ய வேண்டும் என்று தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கையில் அமைதி நிலை திரும்ப இந்திய அரசு உரிய முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார். இலங்கைத் தமிழரின் தற்போதைய உண்மை நிலையை அறிய இந்தியாவிலிருந்து அனைத்துக் கட்சி எம்.பிக்கள் குழுவை அனுப்பவேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சிகளின் கோரிக்கையை அடுத்து, இப் பிரச்சினை குறித்து கலந்துபேசுவதற்காக டில்லியிலிருந்து பிரதிநிதியை அனுப்புவதாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இந்தியா தலையிட்டதும், இந்திய அமைதிப் படை இலங்கைக்குச் சென்று திரும்பியதும் கடந்த கால நிகழ்வுகள்.

ராஜீவ் கொலைச் சம்பவத்துக்குப் பிறகு இலங்கைப் பிரச்சினையிலிருந்து விலகி நிற்கும் இந்திய அரசு தற்போதைய நிலையில் என்ன நடவடிக்கையை மேற்கொள்ளப் போகிறது என்பது மிகப்பெரிய கேள்விக்குறி.

இலங்கைப் பிரச்சினையை அண்டை நாட்டுப் பிரச்சினையாகக் கருதி நாம் ஒதுங்கிவிட முடியாது. ஏனெனில் இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு அகதிகளாக தஞ்சம் வருபவர்கள் தமிழர்கள். அவர்கள் எண்ணிக்கை உயரும் பட்சத்தில் இங்கு பிரச்சினைகள் மேலும் தீவிரமாகும்.

அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களின் நிலைமை குறித்து இரு தமிழக அமைச்சர்கள் நேரடியாகப் பார்வையிட்டு வந்துள்ளனர்.

அவர்களது அறிக்கையின் அடிப்படையில் அகதிகளின் நல் வாழ்வுக்காக உரிய நடவடிக் கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். இலங்கைப் பிரச்சினை தலைதூக்கும் போதெல்லாம், கடலில் மீன் பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்கள் அந்நாட்டுக் கடற்படையால் தாக்கப்படுகின்ற நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைக்க மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளையும் இலங்கை அரசையும் தொடர்ந்து போர்நிறுத்த ஒப்பந்தத்தை செயல்படுத்தச் செய்ய வேண்டும்.மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தையை தொடரச் செய்வதற்கு இரு தரப்பினரையும் இணங்கச் செய்யும் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் சர்வதேச உதவிகள் கிடைக்கச் செய்ய வேண்டியது முக்கியம். போர் மூலம் எந்தத் தீர்வையும் பெறமுடியாது என்பதை கடந்த கால வரலாறுகள் காட்டுகின்றன. முறிந்துபோன பேச்சுவார்த்தை மீண்டும் தொடருவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்றுள்ளது. (தி)

# தொடரும் வன்முறைகளால் சிறார்களின் வாழ்க்கை பாதிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தொடரும் வன்முறைகளால் சிறார்களின் வாழ்க்கை பாதிக்கப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் சிறார் அமைப்பான யுனிசெப் எச்சரிக்கை விடுத்துள்ளது.

யுனிசெப்பின் இலங்கைக்கான திட்ட ஒருங்கிணைப்பாளர் யாஸ்மின் ஹேக் இதுதொடர்பில் கருத்துக்கூறுகையில், வடக்கு-கிழக்கில் தொடரும் வன்முறையால் சிறார் பாதிக்கப்படுகின்றனர். தங்களது பாதுகாப்பு குறித்த அச்ச உணர்வு அவர்களிடம் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் அமைதியை உருவாக்க யுனிசெப்பும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்றார். இதனிடையே வடக்கு-கிழக்கு வன்முறைகளால் கண்ணி வெடி அகற்றும் பணிகளும் தாமதமடைந்துள்ளதாக கண்ணி வெடி அகற்றல் குழுவின் செயலாளர் ஏ.எஸ். குலசிங்கம் தெரிவித்துள்ளார்.

கண்ணிவெடி அகற்றும் பணியை நாம் தொடர்ந்து மேற்கொள்கிறோம். இருப்பினும் சில பகுதிகளில் நிலைமைகள் மோசமாக உள்ளபடியால் அப்பணிகள் மெதுவாக நடைபெறுகின்றன.

கடந்த மாதங்களுடன் ஒப்பிடுகையில் வடபகுதியில் இம்மாதம் சில அமைப்புகள் கூடுதலான பணிகளைச் செய்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் இராணுவத்தினரிடமிருந்து முழுமையான ஒத்துழைப்பை நாங்கள் பெற்று வருகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் தாக்குதல்கள் நடத்தப்படுகின்ற நிலைமையிலும் எமது பணிகள் முடங்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் வடக்கு-கிழக்கு வன்முறைகளால் சுற்றுலாத்துறையில் 25வீத பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கெப்பிட்டிக்கொல்லாவ சம்பவத்தைத் தொடர்ந்து பல சுற்றுலாப் பயணிகள் கொழும்பிலிருந்து வெளி யேறி விட்டதாகவும் பாதுகாப்பற்ற நிலையில் சுற்றுலாப் பயணிகள் இங்கு வரமாட்டார்கள் என்றும் சுற்றுலா முகவர் ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையே வடக்கு-கிழக்குப் படுகொலைகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணையம் முழு அளவிலான விசாரணையைத் தொடங்கியுள்ளது. யாழ். ஊர்காவற்றுறை, வெலிக்கந்த மற்றும் மன்னார் வங்காலை படுகொலைகள் தொடர்பில் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்தகைய படுகொலைகள் உடனே தடுத்து நிறுத்தாவிட்டால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எதிர்விளைவுகள் ஏற்படும் என்றும் மனித உரிமைகள் ஆணையம் எச்சரித்துள்ளது. இந்தப் படுகொலைகள் தொடர்பான மூன்று தனிக்குழுக்களை மனித உரிமைகள் ஆணையம் நியமித்துள்ளது. இக் குழுக்களின் அறிக்கை இம் மாத இறுதிக்குள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்நிலையில் சமூக சேவைகள் அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், வடக்கு-கிழக்கின் வன்முறைகளால் கடந்த இரண்டு மாதங்களில் 7ஆயிரம் சிறார்கள் இடம் பெயர்ந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (தி)

## சமுகமளிக்கக் கோரிக்கை

சமூக சேவை, சமூக நலத்துறை அமைச்சினால் விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களுக்கான சிற்பம், சித்திரம் ஆகிய பயிற்சி நெறிகள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள் ளது. இதற்கான விண்ணப்பங்கள் யாவும் பிரதேச ரீதியாக கோரப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு 30 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். இதற்கான பயிற்சி நெறி ஆரிய குளத்திற்கு முன்பாகவுள்ள ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் சங்கக்கட்டடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இப் பயிற்சி நெறிக்கு ஆரம்ப விழாவில் விண்ணப்பித்திருந்த மாணவர்களும் சமூக சேவையாளர்களும் கலந்துகொண்டுள்ளதாகவும் இதில் கலந்து கொள்ளாத மாணவர்களினை இன்று காலை 9 மணிக்கு சமுகமளிக்குமாறும் மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி தெரிவித்தார். (த-133)

## யாழ்.குடாநாட்டில் உள்ள இந்திய சிற்பக் கலைஞர்கள் திரும்பிச் செல்ல முயற்சி

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து வந்து யாழ். குடாநாட்டிலுள்ள ஆலயங்களில் சிற்பக் கலையில் ஈடுபட்டு வந்த கலைஞர்கள் சொந்த நாட்டுக்கு திரும்புவதில் மும்முரமாக ஈடுபட் டுள்ளனர். யாழ். குடாநாட்டிலுள்ள பிரசித்திபெற்ற பல ஆல யங்களில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. பல ஆலயங்களில் கோபுர வேலைகள் நடைபெற்று வருகின்றன.


கோபுர வேலைகளை இந்தியாவிலிருந்து வந்த சிற்பக் கலைஞர்கள் மேற்கொண்டு வருகின்றனர். பல ஆலயங்களில் சிற்ப வேலைகள் முடிவடையாத நிலையில் இருக் கின்றன. இந் நிலையில் யாழ்.குடாநாட்டின் தற்போதைய அசாதாரண சூழ்நிலையினால் இந்திய சிற்பக் கலைஞர்கள் நாடு திரும்புவதற்கு முயற்சிசெய்கின்றனர். இதனால் ஆலயங்களில் சிற்ப வேலைகள் பாதிப்படையும் நிலைமை ஏற்பட்டுள்ளது. (த-7)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை வற்றாக்கைப்பதி ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி திருக்கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினொருதினங்கள் மஹோற்சவம் நடைபெறும். (து)

## தினசரி தியானம்
### விவேகச் சிந்தனைகள்



ஒரு சக்தி வாய்ந்த ஔஷதத்தை வரவேற்பது போல இராமாயண காவியத்துக்கு நல்ல வரவேற்பளியுங்கள். அது ஆழ்ந்த மனநோய்களையும் உள்ளுணர்வுகளின் இயலாத் தன்மைகளையும், அந்தராத்மாவின் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்யும். அது உங்கள் பார்வையைத் தெளிவுபடுத்தி கடவுளை நோககிச் செல்லும் பாதையில் உங்களை பலமாகவும் உறுதியாக்வும் நிலைகொள்ளச் செய்யும்.

சுவாமி விவேகானந்தர்

# கைது செய்த இளைஞர்களைக் கொண்டு துண்டுப் பிரசுரம் ஒட்டிய படையினர்

அராலியில் நேற்று முன்தினம் படையினர் கைது செய்து தாக்கிவிட்டு விடுதலை செய்த இளைஞர்கள் மூவரை நேற்றும் படைமுகாமிற்கு அழைத்த படையினர் அவர்களைக் கொண்டு தமது துண்டுப் பிரசுரங்களை ஒட்டுவித்தனர். நேற்று முன்தினம் அராலியில் பிரதான வீதிப் பகுதிகளில் ஒட்டியிருந்த படையினரின் துண்டுப் பிரசுரம் ஒன்றை பிரஸ்தாப இளைஞர்கள் மூவரும் கிழித்தெறிந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் படையினர் கைது செய்து தடுத்துவைத்துத் தாக்கிய பின்னரே விடுதலை செய்தனர்.

நேற்று பிரஸ்தாப இளைஞர்களை தமது படை முகாமிற்கு வருமாறு அழைத்த படையினர் அவர்கள் கிழித்த அதே துண்டுப் பிரசுரங்கள் பலவற்றை வழங்கி அராலிப் பிரதேசம் முழுவதும் ஒட்டுமாறு உத்தரவிட்டு ஒட்டிவித்தனர். (ச-49)

# கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம்மீது இராணுவம் சோதனை நடவடிக்கை

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களை இராணுவத்தினர்மிரட்டியதாகக்குற்றஞ்சாட்டப்படுகின்றது.

நேற்று அங்கு சென்ற இராணுவத்தினர் அங்கிருந்த பணியாளர்களை மிரட்டியதுடன் சில பொருட்களை தீயிட்டுக் கொளுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மாவீரர் துயிலும் இல்லத்தில் உள்ள இடங்கள் சோதனையிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-133,15)

# கொழும்பு சென்ற இளைஞர்கள் பொலிஸாரால் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் கடவுச் சீட்டு எடுப்பதற்காகச் சென்ற குருநகரைச் சேர்ந்த இரு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநகரை சேர்ந்த ஜெயசீலன் ஜோன் ஹென்றி நியூமன் (வயது-32), அருள்தாசன் தயான் (வயது-21) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சவுதிஅரேபியாவுக்குச் செல்வதற்காக கடவுச்சீட்டு எடுக்கச் சென்ற சமயம் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்களது உறவினர்கள் யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறையிட்டுள்ளனர். (ச-132,133)

# கோப்பாய் வாசி கொம்மாதுறையில் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

கொம்மாதுறையில் மதுபானசாலை உரிமையாளர் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஐயாத்துரை நிர்மலகுமார்(வயது-55) என்பவரே இவ்வாறு பலியானவராவார். நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் யாழ்ப்பாணம் கோப்பாயை சொந்த இடமாகக் கொண்டவர். இவர் தற்போது வாழைச்சேனை கல்குடா வீதியில் வசித்துவருவதுடன் இவர் செங்கலடி,கொம்மாதுறை ஆகிய பகுதிகளில் மதுபானசாலைகளை நடத்திவருபவர் எனத் தெரியவருகின்றது.

கொம்மாதுறையில் உள்ள இவரது மதுபான சாலையில் வைத்து மோட்டார் சைக்களில் வந்த இனந்தெரியாதவர்கள் சுட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரியவருகின்றது. (ச-5)

# வயோதிபர்...

உயிரிழந்தவராவார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் இவரை சுட்டுவிட்டு தப்பிச் சென்றதாக உறவினர்கள் தெரிவித்தனர். (ச-15)

# கைதுசெய்யப்பட்ட இளைஞன் காங்கேசன்துறையில்

(யாழ்ப்பாணம்)

கடந்த 11-ம் திகதி கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பில் கைதுசெய்யப்பட்ட காளிகோயில் வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் மயூரன் (வயது 23) என்ற இளைஞன் காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் காங்கேசன்துறைக்குச் சென்ற மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி சுவேந்திரராசா, சட்ட ஆலோசகர் ரெமிடியஸ் ஆகியோர் சென்று பார்வையிட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-132,133)

# அரசு-புலிகளின்...

பொறுப்புணர்வுடன் செய்ததாகவே நாம் கருதுகிறோம். ஐந்து நோர்டிக் நாடுகளின் பிரதிநிதிகளும் கடந்த நான்கரை வருடங்களாக மிகச்சிறப்பாக தங்கள் பணிகளை புரிந்துள்ளபோதிலும் ஐரோப்பிய ஒன்றியத் தடையின் பின்னர் அவர்களது பணி நடுநிலைமையுடையதாக இருக்குமென விடுதலைப்புலிகள் கருதவில்லை. இருப்பினும் இது எமக்கு கவலையளிக்கும் ஒரு விடயம் தான் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு திரும்பியபின்னர் அரச தரப்பினரைச் சந்திக்கவுள்ள பிறட்ஸ்கர் அவர்களது பதில் தொடர்பாக விவாதிக்கவுள்ளதாக தெரிவித்ததுடன் இரு தரப்பினருக்குமான பதில் யூன் 29 இல் வெளியாகுமென்று உறுதியளித்தார். (ச-5)

# தமிழீழ உரிமைப் போராட்டத்தை...

இச் சந்திப்பையடுத்து ஊடகவியலாளர்களுக்கு சு.ப.தமிழ்ச்செல்வன் அளித்த நேர்காணல் வருமாறு,

*கேள்வி:-* இன்றைய சந்திப்புத் தொடர்பாக?

*பதில்:-* நோர்வே அனுசரணையாளர்களை வழமையாக சந்திக்கின்ற சந்திப்பாகவே இது அமைந்தது. முக்கியமாக ஒஸ்லோ சந்திப்புக்களுக்குப் பின்னரான சந்திப்பு என்ற வகையில் அரசும் அரச படைகளாலும் படுகொலைகளையும் வன்முறைகளையும் அதிகரித்துள்ள நிலையில் நாம் நோர்வே அனுசரணையாளர்களை சந்தித்தது என்ற வகையில் இச் சந்திப்பு முக்கியம் பெறுகின்றது.

நோர்வே அனுசரணையாளர்களுக்கு எமது நிலைப்பாட்டை தெட்டத் தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவித்துள்ளோம். அரசாங்கம் தொடர்ந்து தமிழ் மக்களை படுகொலை செய்து கொண்டிருப்பதும் எமது பிரதேசம் மீதும் எமது மக்கள்மீதும் விமானப் படை குண்டு வீச்சுக்களையும் ஆட்லறித் தாக்குதல்களையும் பீரங்கித் தாக்குதல்களையும் நடத்தி எமது மக்களை படுகொலை செய்வதும் எமது மக்கள் காணாமல் போவதும் மக்கள் அகதிகளாக்கப்பட்டுக்கொண்டிருப்பதும் போன்ற நடவடிக்கைகள் ஒரு பிரகடனப்படுத்தாத யுத்தத்தை எமது தேசம் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது என்பதையே சுட்டிக் காட்டுகின்றது என்பதையும் நாம் அரசின் செயற்பாடுகளை பார்த்துக் கொண்டு பொறுமை காத்துக் கொண்டிருக்க முடியாது என்பதையும் உறுதியாக தெரிவித்துள்ளோம் என்றார்.

*கேள்வி:-* நோர்வேத் தரப்பிற்கு ஐந்து கேள்விகளுக்கான பதில் விடுதலைப்புலிகளினால் எந்த வகையில் அனுப்பப்பட்டுள்ளது.

*பதில்:-* எமது சமாதான செயலகம் ஊடாக கடந்த 19 ஆம் திகதி நோர்வேக்குப் பதிலினை அனுப்பியுள்ளோம். நோர்வேயின் கேள்விகளுக்கான ஒட்டுமொத்தமான பதிலினை தெரிவித்துள்ளோம்.

அதாவது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறுவது தொடர்பான கால அவகாசத்தை கேட்டிருந்தார்கள். நாம் நீண்ட கால அவகாசத்தை கொடுப்பதில் உள்ள சங்கடமான நிலைமைகள் பற்றியும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை நூறு வீதம் கடைப்பிடிக்கின்ற தன்மையை அரசு காட்டுகின்ற போதுதான் யுத்தநிறுத்த உடன்பாடு மேற்கொண்டு செல்ல முடியும் என்பது பற்றி விளக்கங்களை பதிலில் தெரிவித்துள்ளோம்.

*கேள்வி:-* போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்குபற்ற முடியாது என நீங்கள் தெரிவித்தாக ஹான்ஸ் பிறட்ஸ்கர் தெரிவித்துள்ளாரே.

*பதில்:-* ஐரோப்பிய ஒன்றியம் தடை அறிவிப்பை வெளியிட்டது என்பது நடுநிலைமை-சம தரப்பு என்ற கோட்பாட்டை, நிலைப்பாட்டை பலவீனப்படுத்தியிருக்கின்றது. யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்படுகின்ற போது எமது தலைமைப்பீடம் மிகவும் உறுதியான நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தது. நோர்வேத் தரப்போடு உடன்பாடு கூட காணப்பட்டது.

அதாவது கண்காணிப்புப் பணியை மேற்கொள்கின்ற நாடுகள் இரண்டு தரப்பையும் சமத்துவமாகவும் சமதரப்பாகவும் நடுநிலையோடும் ஏற்றுக் கொண்ட நாடுகளாக அமைய வேண்டும் என்பது இணக்கப்பாடு காணப்பட்ட விடயம்.

துரதிஷ்டவசமாக ஐரோப்பிய யூனியன் தடை அறிவிப்பை செய்தது என்பது அது யுத்தநிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம். அதன் செயற்பாட்டிற்கு நெருக்குவாரத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு ஏற்ற வகையில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என்பது நாம் ஏற்கனவே கண்ட இணக்கப்பாடு. அதன் அடிப்படையில்தான் நாம் மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றோம்.

ஐரோப்பிய நாடுகள் இந்தப் பணியைச் செய்கின்றபோது யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துகின்ற , கண்காணிக்கின்ற கண்காணிப்பாளர்கள் நடுநிலைமை தவறிய ஒரு நிலையில்தான் இருக்கும்.

எங்கள் மக்களோ, நாங்களோ அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. யுத்தநிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கமும் கண்காணிப்பும் பலவீனமாகப் போகும். ஒரு பக்கச் சார்பாகவும் போகும். அந்த நிலையில் நோர்வே தரப்பிற்கு இதன் முக்கியத்துவங்களையும் நிலைமைகளையும் நாங்கள் வெளிப்படுத்தி விரைவாக மாற்றங்களைச் செய்து ஒழுங்குபடுத்த முடியுமாகவிருந்தால் ஒழுங்குபடுத்தும்படியும் தெரிவித்திருக்கின்றோம்.

*கேள்வி:-* மாற்றம் செய்வது தொடர்பாக நோர்வே கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளதா?

*பதில்:-* ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் நோர்வேக்கு உள்ளது. ஏனெனில் தடை அறிவிப்பை ஐரோப்பிய ஒன்றியம் செய்து விட்டது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் அடிப்படை இணக்கப்பாடு பலவீனப்பட்டிருக்கின்றது. அதை நோர்வே ஏற்றுக் கொள்வது தவிர்க்க முடியாது.

*கேள்வி:-* விமானப்படையின் விமானத் தாக்குதல்கள் தொடர்பாக ஹான்ஸ் பிறட்ஸ்கர் கருத்துக்கள் எதுவும் தெரிவித்தாரா?

*பதில்:-* விமானத்தாக்குதல், பீரங்கித் தாக்குதல்களை அரச படைகள் தொடர்ந்து எமது பிரதேசங்கள்மீது நடத்திய வண்ணமேயுள்ளது. இவை பாரதூரமான யுத்தநிறுத்த மீறல்கள். இது ஒரு யுத்த பிரகடனமே என்று உணர்கின்றோம் என்பதையும் நோர்வேத் தரப்பிற்குச் சுட்டிக்காட்டி தொடர்ந்து தாக்குதல்கள் இடம்பெறுமாகவிருந்தால் எம்மீது தொடுக்கப்பட்ட யுத்தமாகக் கருதி நாமும் பதில் தாக்குதல்களை நடத்த வேண்டிவரும் என்பதை நோர்வே அனுசரணையாளர்களுக்குத் தெரிவித்துள்ளோம்.

*கேள்வி:-* தமிழ் நாட்டில் அரசியல் கட்சிகள் ஈழத் தமிழர்களுக்குக் குரல் எழுப்பி வருகின்றன. தற்போதைய நிலையில் இந்தியாவின் பங்களிப்புத் தொடர்பாக உங்களின் கருத்து என்ன?

*பதில்:-* இலங்கை அரசாங்கம் காடைத்தனமான, வெறித்தனமான இனப்படுகொலையை கட்டவிழ்த்து விட்டுள்ள நிலையில் தமிழர் தாயகத்தில் எமது மக்கள் படுகொலை செய்யப்படுகின்ற போது தமிழகத்தில் வாழுகின்ற எமது மக்கள் உணர்ச்சிவசப்பட்ட நிலைக்கும் கொந்தளிப்பான நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

எங்களுடைய மக்கள் ஒன்றுபட்டு இலங்கையரசாங்கத்தின் இனப்படுகொலைக்கு எதிரான தமது உணர்வுகளை வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் இந்திய அரசும் தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து அரசாங்கத்தின் இனப் படுகொலைகளுக்கும் யுத்த முன்னெடுப்புக்களுக்கும் தமது கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டியது இந்திய அரசினது பொறுப்பாக இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

இந்திய அரசு இலங்கையரசின் அடாவடித்தனங்களைக் கண்டித்து தமிழர்களுடை உரிமைப் போராட்டத்தை ஏற்றுக் கொண்டு அங்கீகரித்து தார்மீக ஆதரவை இந்திய அரசும் வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான் தமிழ் மக்களுடைய விருப்பம். அதுதான் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடும்.

*கேள்வி:-* தமிழர் தாயகத்தில் படைகளின் ஆழ ஊடுருவும் அணியினர் தாக்குதல்களை அரசு மறுத்து வந்திருக்கின்றது. ஆழ ஊடுருவும் அணியினரின் தாக்குதல் முயற்சிகளை தமிழீழ விடுதலைப்புலிகளும் மக்களும் இணைந்து முறியடித்து வருகின்றனரே. அரசின் மறுப்புத் தொடர்பாக இன்றைய சந்திப்பில் பேசப்பட்டதா?

*பதில்:-* இந்த நிலைப்பாட்டை இன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டினோம். அதாவது ஆழ ஊடுருவும் அணியின் செயற்பாடுகள், ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள், இராணுவத்தின் படுகொலை முயற்சிகள், பேசாலை – அல்லைப்பிட்டி உட்பட்ட இடங்களில் எமது மக்கள் குழந்தைகள் மிகக் கொடூரமாக கொல்லப்பட்ட நிகழ்வுகள் தொடர்பாகவும் முழுக்க முழுக்கவே படைத்தரப்பும் புலனாய்வுத் துறையும் இணைந்து செய்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் எமது மக்களிடம் உள்ளன.

அரசின் வெளிப்படையான மனித உரிமை மீறல் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

*கேள்வி:-* பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் இவ்வாறான சந்திப்புக்கள் பயன் தரும் எனக் கருதுகிறீர்களா?

*பதில்:-* சர்வதேச உறவுகள், தொடர்புகளை நாம் துண்டிக்க முடியாது. அனுசரணையாளர்கள்என்ற வகையில் எங்களுடன் பேசுவார்கள். கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார்கள். வழமையான நடவடிக்கை. இந்த நடவடிக்கைகள் தொடரும். இதில் முன்னேற்றமின்மை என்பது தரப்புக்களைப் பொறுத்தது.

இலங்கையரசு இதை மதிக்காமல், ஏற்றுக் கொள்ளாமல் யுத்தநிறுத்த உடன்பாட்டையோ அமைதி முயற்சியையோ சீர்குலைத்து படுகொலைகளையும் ஒரு குழப்பகரமான சூழலையும் உருவாக்க வேண்டும், ஒரு யுத்தத்தை நிகழ்த்தவேண்டும் என்ற நிலையில் செயற்படும் போது இச் சந்திப்புக்கள் எந்தப் பயன்களையும் தராது. அரசின் போக்கிலேயே எல்லாம் உள்ளன.

*கேள்வி:-* நோர்வேயின் ஐந்து கேள்விகளுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளினால் அனுப்பப் பட்ட பதிலுக்கு யார் கையொப்பம் இட்டார்கள்?

*பதில்:-* தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன் கையொப்பம் இட்டுள்ளார் என்றார். (ச-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.06.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.